தினபூமி
thinaboomi.com
பூமி: 32 சுற்று: 67 மாசி 02
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, சனி, பிப்ரவரி 14, 2026
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹3.00



## வங்கதேசத்தில் பி.என்.பி. ஆட்சியை கைப்பற்றியது: பிரதமராகிறார் தாரிக் ரஹ்மான்

....2-ம் பக்கம்

## பிரதமர் அலுவலக கட்டிடம்: 'சேவா தீர்த்' வளாகத்தை திறந்து வைத்தார் பிரதமர்

...3-ம் பக்கம்

## டி-20 உலகக் கோப்பையில் அதிவேகமாக 100 ரன்களை எடுத்து இந்தியா புதிய சாதனை

....6-ம் பக்கம்






முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்காவைச் சேர்ந்த கே.எல்.எ. கார்ப்பரேஷன் நிறுவனத்தின் துணை நிறுவனமான கே.எல்.எ. இந்தியா லிமிடெட் 3,510 கோடி ரூபாய் முதலீட்டு பொறுப்புறுதியுடன், சென்னையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் புத்தாக்க மையம் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர், கே.எல்.எ. நிறுவனத்தின் தலைமை திட்ட அலுவலர் பாபி பெல், மூத்த இயக்குநர் சேக்ஹெள இயோ, கே.எல்.எ. இந்தியா தலைவர் டொமினிக் டேவிட், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மகளிர் உரிமைத்தொகையாக

# ரூ.5 ஆயிரம் வழங்க தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்த நிதி ரூ.6,500 கோடி..!

சென்னை, பிப். 14-

**மகளிர் உரிமைத்தொகையாக ரூ.5 ஆயிரம் வழங்க ரூ.6,500 கோடி நிதியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது.**

கடந்த 2021-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைக்க காரணமாக இருந்த தேர்தல் வாக்குறுதி, "அனைத்து குடும்ப தலைவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1,000 மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும்" என்பதுதான். ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ந்தேதி அண்ணா பிறந்தநாளில்தான் இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

மொத்தம் 1 கோடியே 13 லட்சம் பெண்கள் பயனாளிகளாக கண்டறியப்பட்டு, அவர்களது வங்கிக் கணக்குகளில் மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 1 கோடியே 31 லட்சம் பெண்கள் பயன்பெறும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

இம்மாதம் மகளிர் உரிமைத்தொகை 15-ம் தேதிதான் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், நேற்று காலை யாரும் எதிர்பாராத வகையில், மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்கள் இன்ப அதிர்ச்சி அடையும் வகையில் அவர்களுடைய வங்கிக் கணக்கில் ரூ.5 ஆயிரம் பணம் வரவு வைக்கப்பட்டது. செல்போனில் வந்த குறுஞ்செய்தியை பார்த்து, பலரால் நம்பவே முடியவில்லை.

இந்த நேரத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலினும் வீடியோ ஒன்றை வெளியிட்டு, ரூ.5 ஆயிரம் பணம் வரவு வைக்கப்பட்டதை உறுதிப்படுத்தினார். தேர்தல் நேரத்தில் மகளிர் உரிமைத்தொகை வழங்குவதை தடுக்க எதிர்க்கட்சிகள் முயற்சி செய்வதால், முன்கூட்டியே ரூ.3 ஆயிரம் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். மேலும், கோடை கால சிறப்பு தொகையாக ரூ.2 ஆயிரம் சேர்த்து வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஆனால், எதிர்க்கட்சிகளோ, தேர்தல் நேரத்தை மனதில் வைத்தே இதுபோன்று தி.மு.க. அரசு நடந்து கொண்டதாக குற்றம்சாட்டின. எது எப்படியோ, மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்களுக்கு ஜாக்பாட் அடித்துவிட்டது. இதற்கு, அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு தெரியுமா? ரூ.6,550 கோடி.

### தமிழ்நாட்டில் கலைஞர் உரிமை தொகை திட்டத்தில் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணம் மற்றும் சிறப்பு தொகை ரூ.2,000 உள்பட

# 1.31 கோடி மகளிர் வங்கி கணக்கில் ரூ.5,000 வரவு

## திராவிட மாடல் 2.0 ஆட்சிக்காலத்தில் உரிமை தொகை ரூ.2,000 ஆக மேலும் உயர்த்தப்படும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்குறுதி

சென்னை, பிப். 14-

**மகளிர் உரிமைத் தொகையாக ரூ. 5,000 நேற்று காலை வரவு வைக்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பிப்ரவரி மாதத்துக்கான ரூ. 1,000 பணத்துடன், மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கு முன்பணமாக ரூ. 2,000 மற்றும் கோடைக்கால சிறப்பு தொகுப்பாக ரூ. 2,000 என மொத்தம் ரூ. 5,000 வழங்கப்பட்டுள்ளது.**

> 5 ஆயிரம் ரூபாயை அடுத்த 3 மாதத்துக்கு நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதால், கொஞ்சம் கவனமாகச் செலவிடுங்கள். முடிந்த அளவுக்குச் சேமிக்கவும் பாருங்கள். உங்கள் ஆதரவோடு அடுத்து அமையப் போவதும் திராவிட மாடல் ஆட்சிதான்.
> - முதல்வர் மு.க.ஸ்டாலின்

**எதற்காக பணம்?**

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட விடியோ தெரிவித்திருப்பதாவது:-

நேற்று) காலை, அரசு சார்பில் 5 ஆயிரம் ரூபாய் உங்கள் கணக்கில் வந்திருக்கும். எதற்காக இந்தப் பணம்? நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது கொரோனா உச்சத்தில் இருந்தது. அதைச் சமாளித்து மக்களின் உயிரைக் காத்தது மட்டுமல்ல, அவர்கள் வாழ்வாதாரத்தைக் காக்க 4 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையையும் வழங்கினோம்.

**கடும் நிதி நெருக்கடி...**

சென்ற ஆட்சி விட்டுவிட்டுப் போன கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளித்து, ஆட்சிக்கு வந்ததுமே பல திட்டங்களை நிறைவேற்றினோம். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்தேன். அப்போது, "இது சாத்தியமே இல்லை" எனச் சிலர் சொன்னார்கள்.

**திட்டம் விரிவாக்கம்...**

ஆனாலும், நிதி நெருக்கடியைச் சமாளித்து, மத்திய அரசின் ஓரவஞ்சனையையும் மீறி, கடந்த 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட"த்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். முதலில், ஒரு கோடியே 13 லட்சம் மகளிருக்குப் பயனளித்த இந்தத் திட்டம், அண்மையில் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது ஒரு கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இது வெறும் நிதியுதவி அல்ல.

**அத்தியாவசியச் செலவுகள்...**

சமூகத்தில் பெண்கள் ஆற்றும் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காகக் கொடுக்கப்படுகிற உரிமைத்தொகை. இந்தத் தொகையை வைத்து, அன்றாட வீட்டுச் செலவுகள், குடும்பத்தில் ஏற்படும் மருத்துவச் செலவுகள், குழந்தைகளுக்கான கல்விச் செலவுகள் என பல அத்தியாவசியச் செலவுகளை, மகளிர் தாங்களே நிறைவு செய்ய இந்த திட்டம் வழிவகுத்தது.

**தொகையை நிறுத்த...**

அதனால்தான், ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதி என்பது, ஒவ்வொரு குடும்பத் தலைவியும் ஆவலோடு எதிர்பார்க்கும் நாளாக அமைந்துள்ளது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்தத் திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றி வருகிறார்கள். இந்த உரிமைத் தொகையை மேம்படுத்த வேண்டும் என நாம் செயல்பட்டு வந்தால், அதற்கு எதிராக டெல்லியில் இருக்கும் ஒரு கூட்டமும், தமிழ்நாட்டில் அவர்களுக்கு அடிமையாக இருக்கும் இன்னொரு கூட்டமும், எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி, அடுத்த 3 மாதங்களுக்கு இந்த மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த, சூழ்ச்சி செய்வதாகத் தகவல் வருகிறது. இதுபற்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் சிலர் முயற்சி செய்வதாகச் செய்திகள் வருகிறது.

**உணர முடிகிறது.....**

ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் உழைப்பை அங்கீகரிக்கும் இந்த திட்டத்தை 3 மாதம் நிறுத்தி வைத்தால் நீங்கள் எவ்வளவு சிரமங்களுக்கு ஆளாவீர்கள் என உங்கள் வீட்டில் ஒருவனாக இருக்கும் எனக்கு நன்றாகத் தெரியும். கடும் வெய்யிலில் வேலைக்குப் போக கடினமான கோடைக்காலத்தில், இந்தத் தொகை நிறுத்தப்பட்டால், உங்களுக்கு எவ்வளவு வலி ஏற்படும் என என்னால் உணர முடிகிறது.

**சிறப்புத் தொகை...**

உங்கள் மாதாந்திர செலவை, எப்படி சமாளிப்பீர்கள்? உங்கள் குடும்பத்தில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மாத்திரை வாங்கிக் கொடுக்க

(கடைசி பக்கம் பார்க்க)

# சட்டசபை தேர்தல் பயத்தால் 5 ஆயிரம் ரூபாய் அறிவிப்பு

## எடப்பாடி பழனிசாமி கடும் விமர்சனம்




சென்னை, பிப். 14-

**அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதியைக் கண்டதும், வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் பயத்தில் ரூ.5 ஆயிரம் ரூபாயை முதல்வர் அறிவித்துள்ளதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.**

தமிழகத்தில் உள்ள 1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரம் மற்றும் கோடைக்கால சிறப்புத் தொகுப்பாக ரூ.2 ஆயிரம் என நேற்று காலை 5 ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், தேர்தல் பயத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;-

“தேர்தல் தோல்வி பயம், முதல்வர் என்னவெல்லாம் செய்ய வைக்கிறது என்று பார்த்தீர்களா? 28 மாதங்களாக '1000 ரூபாய்' கொடுக்காமல் இழுத்து அடித்த ஸ்டாலின் அரசு, தற்போது மூன்று மாதத் தொகையோடு சேர்த்து 'கோடைக்கால சிறப்புத் தொகை' கொடுக்கிறாராம்.2024, 2025-ம் ஆண்டுகளில் நமக்கு கோடைக்காலமே வரவில்லையா?

சிறுமி முதல் மூதாட்டி வரை எந்தவொரு பெண்ணுக்கும் பாதுகாப்பு இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை சீர்குலைத்துவிட்டு, இப்போது 'தேர்தல் நேரத்து பணம்' வரவு வைக்கும் இந்த "Patchwork" வேலையை தமிழ்நாட்டுப் பெண்கள் நம்பி விடுவார்களா என்ன?

செப்டம்பர் 2023 முதல் இதுவரை உங்கள் அரசு கொடுத்த தொகை ரூ.34,000! ஆனால், உங்கள் ஆட்சியால் ஒவ்வொரு குடும்பமும் இழந்த குறைந்தபட்சத் தொகையே "ரூ.3,50,000"! இதை வீடு வீடாக சென்று அ.தி.மு.க. அம்பலப்படுத்தி வருவதைக் கண்ட பயத்தில் வருவது தானே இந்த அறிவிப்பு? இப்போது 'மாதம் 2000 ரூபாய்' என்று நான் அளித்த அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதியைக் கண்டதும் , வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் பயத்தில் இந்த அறிவிப்பு வெளியில் வருகிறது பாருங்கள் மக்களே...

யாரும், எந்தவொரு திட்டத்தையும் தடுக்காத போதிலும், நீங்களாக வந்து 'ஐயையோ முடக்கப் பார்க்கிறார்கள்' என்று சொல்வதைப் பார்த்ததால் வேடிக்கையாக இருக்கிறது. 'அனைத்து குடும்ப அட்டைக்கும்' என்று வாய்கிழிய அளித்த வாக்குறுதியை 5 ஆண்டுகளாக நிறைவேற்றாமல், தகுதியானவர்களுக்கு மட்டும் என சொல்லி 1 கோடி தமிழ்ப் பெண்களை நிராகரித்துள்ளீர்கள்.

தமிழக மக்களின் பேராதரவுடன் இன்னும் மூன்று மாதங்களுக்குள் அமையவுள்ள அ.தி.மு.க. ஆட்சியில், தமிழக பெண்களுக்கு 'குலவிளக்குத் திட்டம்' மூலம் அனைத்து குடும்பத் தலைவிக்கும் மாதம் ரூ.2,000 என்று நான் அளித்த வாக்குறுதியானது, கழக ஆட்சி அமைந்தவுடன் அமல்படுத்தப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதல்வருக்கு நன்றி கூறிய பெண்கள்

சென்னை, பிப். 14-

**மகளிர் உரிமைத் தொகையாக ரூ. 5,000 வழங்கியதற்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினைச் சந்தித்து தி.மு.க. மகளிரணியினர் நன்றி தெரிவித்தனர்.**

தமிழகத்தில் விரைவில் பேரவைத் தேர்தல் அறிவிக்கப்படவுள்ளதையொட்டி மகளிர் உரிமைத் தொகை பெறும் மகளிரின் வங்கிக் கணக்குகளில் இம்மாதம் ரூ. 5,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரியுடன் மார்ச், ஏப்ரல் மாதத்துக்கும் சேர்த்து ரூ. 3,000 மற்றும் கோடைக்கால சிறப்புத் தொகுப்பாக ரூ. 2,000 வரவு வைக்கப்பட்டதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்புக்கு பெண்கள் மத்தியில நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. ஆனால், எதிர்க்கட்சியினர் இது பற்றி விமர்சனம் செய்து வருகின்றனர். இந்நிலையில் தி.மு.க. மகளிரணியினர் உள்ளிட்ட பெண்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்துள்ளனர். அவர்களுடன் முதல்வர் ஸ்டாலின் கலந்துரையாடினார்.

### 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின்கீழ்

# மேலும் 1 லட்சம் புதிய வீடுகள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி

சென்னை, பிப். 14-

**கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மேலும் ஒரு லட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்காக ரூ.3,500 கோடி நிதி ஒதுக்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.**

குடிசை மற்றும் சேதமடைந்த வீடுகளில் வசிப்பவர்கள், பட்டா இருந்தும் சொந்தமாக வீடு இல்லாதவர்கள், ஏழை, எளிய மக்கள் உள்ளிட்ட தகுதியுடைய பயனாளிகளுக்கு, 360 சதுர அடி நிலம் இலவசமாக வழங்கப்பட்டு, ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டித்தரப்படும்.

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 2 லட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கலைஞர் கனவு இல்லம் திட்டம், 2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை "குடிசைகள் இல்லாத மாநிலமாக" மாற்றுவதற்காக தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது. 2030-க்குள் மொத்தம் 8 லட்சம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் கட்ட அமர்வு நிறைவு

## பார்லி., இரு அவைகளும் மார்ச் 9-க்கு ஒத்திவைப்பு

புதுடெல்லி, பிப். 14-

**பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் அமர்வு நேற்றுடன் நிறைவு பெற்ற நிலையில் இரு அவைகளும் மார்ச் 9 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன. 2-ம் அமர்வு மார்ச் 9 ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 2 வரை நடைபெறவிருக்கிறது.**


பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த ஜன. 28 ஆம் தேதி ஜனாதிபதி உரையுடன் தொடங்கிய நிலையில் பிப். 1 ஆம் தேதி 2026 - 27 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து கூட்டத்தொடரில் சீன ஆக்கிரமிப்பு, இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என பல்வேறு பிரச்னைகளை எழுப்பி எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டன.

ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது விவாதம் நடந்த நிலையில், பிப். 4 அன்று மக்களவையில் தீர்மானத்திற்கு நன்றி தெரிவித்து பிரதமர் மோடி உரையாற்றுவார் என்று கூறப்பட்ட நிலையில் பிரதமர் மோடி அவைக்கு வரவில்லை. எதிர்க்கட்சி பெண் எம்.பி.க்கள் சதி செய்யத் திட்டமிட்டிருந்ததால் பிரதமரை அவைக்கு வர வேண்டாம் என்று தான் கூறியதாக அவைத் தலைவர் ஓம் பிர்லா கூறினார். இது பெரும் சர்ச்சையை எழுப்பியது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்களின் நடவடிக்கைகள் தொடர்பான விடியோக்களை அமைச்சர் கிரண் ரிஜிஜு வெளியிட்டுள்ளது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து நேற்றும் இந்திய - அமெரிக்க வர்த்தக

(கடைசி பக்கம் பார்க்க)

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -400.76 | -124.00 |
| பாயிண்ட் 85,231.92 | பாயிண்ட் 26,068.15 |




**தங்கம்**
1 சவரன் ₹91,680
1 கிராம் ₹11,460



**வெள்ளி**
1 கிலோ ₹169,000
1 கிராம் ₹169.00

**டாலர்** ₹89.63

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



## 212 தொகுதிகளுக்கும் அதிகமாக வெற்றி:
# வங்கதேசத்தில் பி.என்.பி. ஆட்சியை கைப்பற்றியது
### பிரதமராக இன்று பதவியேற்கிறார் தாரிக் ரஹ்மான்



**டாக்கா, பிப். 14-**

வங்கதேசத்தின் 13-வது நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தலைமையிலான வங்கதேச தேசியவாதக் கட்சி (பி.என்.பி.) 212 தொகுதிகளுக்கும் அதிகமாக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையை பி.என்.பி. பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளது.

ஷேக் ஹசீனா ஆட்சிக் கவிழ்ந்து, முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்ற 18 மாதங்களுக்குப் பிறகு பொதுத்தேர்தல் வியாழக்கிழமை நடத்தப்பட்டது. ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பி.என்.பி. மற்றும் அதன் முன்னாள் கூட்டாளியான ஜமாத்-ஏ-இஸ்லாமி இடையே நேரடிப் போட்டி நிலவியது. 300 தொகுதிகளைக் கொண்ட வங்கதேச நாடாளுமன்றத்தில், வேட்பாளர் ஒருவரின் மறைவு காரணமாக ஒரு தொகுதியில் தேர்தல் ரத்து செய்யப்பட்டது.

மீதமுள்ள 299 தொகுதிகளில் நேற்று முன்தினம் வாக்குப்பதிவு நடைபெற்ற நிலையில், மாலை 4.30 மணிமுதல் வாக்கு எண்ணிக்கை தொடங்கப்பட்டது. தொடக்கம் முதலே பி.என்.பி. கட்சி ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையில், மொத்தம் 212 தொகுதிகளுக்கும் அதிகமாக வெற்றி பெற்றுள்ளது. எதிர்க்கட்சியான ஜமாத்-ஏ-இஸ்லாமி 70 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

பி.என்.பி. தலைவர் தாரிக் ரஹ்மான் போட்டியிட்ட டாக்கா மற்றும் போக்ரா ஆகிய இரு தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளார். ஆட்சி அமைக்க தனிப்பெரும்பான்மையை பி.என்.பி. பெற்றிருக்கும் நிலையில், தாரிக் ரஹ்மான் பிரதமராக பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே, தேர்தலுக்கு ஒத்துழைப்பு அளித்த நாட்டு மக்களுக்கு வங்கதேச இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

## வங்கதேசத்தின் புதிய பிரதமராகும் தாரிக் ரஹ்மானுக்கு மோடி வாழ்த்து

**டாக்கா, பிப். 14-**

வங்கதேச பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள வங்கதேச தேசியவாதக் கட்சியின் (பிஎன்பி) தலைவர் தாரிக் ரஹ்மானுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். ஜனநாயகம், முற்போக்கு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வங்கதேசத்துக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வங்கதேச பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு வியாழக்கிழமை மாலை முடிவடைந்தவுடன், எண்ணிக்கை தொடங்கியது. மொத்தமுள்ள 299 தொகுதிகளில் பிஎன்பி கட்சி 212 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் பிஎன்பி கட்சியின் தலைவர் தாரிக் ரஹ்மான் பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

இந்த நிலையில், வங்கதேசத்தில் புதிதாக அமையவுள்ள அரசுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். பிரதமர் மோடி தெரிவித்திருப்பதாவது: வங்கதேச பொதுத் தேர்தலில், வங்கதேச தேசியவாதக் கட்சியைத் தீர்க்கமான வெற்றிக்கு அழைத்துச் சென்ற தாரிக் ரஹ்மானுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றியானது, வங்கதேச மக்கள் உங்கள் தலைமை மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது.

ஜனநாயகம், முற்போக்கு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வங்கதேசத்துக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும். நமது பன்முக உறவுகளை வலுப்படுத்தவும், நமது பொதுவான வளர்ச்சி இலக்குகளை அடையவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசின் பணியாளர் தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2025-ம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகுதி-IV உள்ளிட்ட போட்டித் தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 9801 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மகளிர் உரிமைத்தொகை குறித்த
# அரசின் அறிவிப்பால் வங்கிகளில் அலைமோதிய பெண்கள் கூட்டம்

**சென்னை, பிப். 14-**

தமிழக அரசு அறிவித்த மகளிர் உரிமைத் தொகை ரூ. 5 ஆயிரம் எடுக்க வங்கிகளில் நேற்று அலைமோதிய பெண்கள் கூட்டத்தால் வங்கி ஊழியர்கள் திணறினர்.

தமிழக அரசு பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்கான மகளிர் உரிமைத் தொகை திட்டத்தைக் கடந்தாண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணா பிறந்த தினத்தில் அறிவித்துத் தொடர்ந்து தற்போது வரை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முடக்க பல்வேறு சதிகள் நடப்பதாகக் கூறி நேற்று காலை 7 மணியளவில் திடீரென தமிழக முதல்வர் புதிய அறிவிப்பை வெளியிட்டார்.

அதில் மூன்று மாதக்கால உரிமைத்தொகை முன்கூட்டியும், கோடைக்கால தொகையாக ரூ. 2,000 என ஒவ்வொருவருக்கும் 5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதாக அறிவிப்பு வெளியானதால் மகளிர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த நிலையில், இந்த மகளிர் உரிமைத்தொகை பணத்தை விரைந்து எடுக்காவிடில் திரும்பிவிடும் எனப் பொய் தகவல் அதிகளவில் கிராமப்புறங்களில் பரவியதால் கிராமப்புற வங்கிகளில் காலை 9 மணிக்கு முதலே பெண்கள் கூட்டம் அலைமோதியது. தங்கள் வங்கிக் கணக்கு புத்தகம் மற்றும் ஏ.டி.எம் அட்டை உள்ளிட்டவைகளை எடுத்து வரிசையாக வங்கிகளிலும், சில வங்கிகளில் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டும் பணத்தை எடுக்கக் காத்திருக்கின்றனர். மேலும், ஏ.டி.எம். மையங்களில் சிலர் தங்களது அட்டையைப் பயன்படுத்தத் தெரியாமல் பிறரை உதவிக்கு அழைக்கும் நிலையில், கடவுச்சொல் பாதுகாப்பின்மை கேள்விக்குறியாக உள்ளதை அறியாமல் உள்ளனர்.

## திருவண்ணாமலையில் சோகம்:
# வீடு இடிந்து விழுந்ததில் 2 மாணவர்கள் உயிரிழப்பு

**திருவண்ணாமலை, பிப். 14-**

திருவண்ணாமலையில் வீடு இடிந்து விழுந்ததில் 2 மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் அங்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அடுத்த இளங்காடு கிராமத்தில் முனியன் என்பவரது வீட்டை சீரமைக்கும் பணிகள் நடந்து வந்தன. இந்த பணியின்போது எதிர்பாராத வகையில் வீட்டின் சுவர் திடீரென இடிந்து விழுந்தது. இந்நிலையில், இடிந்து விழுந்த வீட்டின் இடிபாடுகளில் சிக்கி முகேஷ் மற்றும் அபினேஷ் ஆகிய 2 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 10 வயது சிறுவன் ஸ்ரீராம் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அணுசக்தி ஒப்பந்த பேச்சுவார்த்தையில் இழுபறி:
# ஈரானை நோக்கி விரையும் அமெரிக்க போர்க்கப்பல்

**நியூயார்க், பிப். 14-**

அணுசக்தி ஒப்பந்த பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள இழுபறி காரணமாக ஈரானை நோக்கி அமெரிக்க போர்க்கப்பல் விரைந்துள்ளது மேற்கு ஆசிய கடல் பிராந்தியத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானில் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வால் அரசு மற்றும் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமெனிக்கு எதிராக போராட்டங்கள் நடந்தது. போராட்டத்தை ஒடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்ததில் வன்முறை வெடித்தது. போராட்டம்-வன்முறையில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். ஈரானில் போராட்டக்காரர்களுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்தது. மேலும், ஈரானை நோக்கி அமெரிக்காவின் மிகப்பெரிய கடற்படை அனுப்பப்பட்டது. அதன்படி ஈரான் அருகே யு.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் போர்க்கப்பல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே அணுசக்தி ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் வலியுறுத்தினர். இது தொடர்பாக இரு நாடுகள் இடையே பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதில் உடன்பாடு எட்டப்படவில்லை. இந்தநிலையில் ஈரானை நோக்கி மேலும் ஒரு அமெரிக்க போர்க்கப்பல் செல்ல உத்தரவிடப்பட்டு உள்ளது. கரீபியன் கடல் பகுதியில் உள்ள அமெரிக்க விமானம் தாங்கி போர்க்கப்பலான ஜெரால்ட் ஆர் போர்டு, மத்திய கிழக்கு பகுதிக்கு புறப்பட உத்தரவிடப்பட்டது.

இதையடுத்து அந்த போர்க்கப்பல் ஈரானை நோக்கி தனது பயணத்தை தொடங்கி உள்ளது. ஈரானுடனான பதட்டங்களுக்கு மத்தியில், அமெரிக்கா மேற்கு ஆசியாவிற்கு 2-வது விமானம் தாங்கிக் கப்பலை அனுப்புகிறது. ஈரானின் தலைவர்களுக்கு எதிராக அமெரிக்க அதிபர் டிரம்ப் மிரட்டல் விடுத்து வரும் நிலையில் பாரசீக வளைகுடாவில் உள்ள யு.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன் போர்க்கப்பலுடன் ஜெரால்ட் ஆர் போர்டு போர்க்கப்பல் இணைய உள்ளது மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பாங்காக்-சென்னை விமானத்தில்
# வன விலங்குகளை கடத்தியவர் கைது

**சென்னை, பிப். 14-**

பாங்காக்-சென்னை விமானத்தில் அரிய வகை ஆமைகள், பாம்புகள், பல்லிகள் உள்ளிட்ட 31 வன விலங்குகளை கடத்தியவர் கைது செய்யப்பட்டார்.

மீனம்பாக்கத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்திற்கு சென்னை விமான நிலையத்தில் பாங்காக்கில் இருந்து விமானத்தில் வந்திறங்கிய பயணிகளிடம் விமான நிலைய அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். அப்போது சந்தேகத்திற்கு இடமான வகையில் நடந்து கொண்ட ஒரு பயணியை சுங்கத்துறை அதிகாரிகள் தனியாக அழைத்து தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது அவரது பையில் மின்சாதன பொருட்களின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெட்டிகளில் அரிய வகை ஆமைகள், பாம்புகள், பல்லிகள் உள்ளிட்ட 31 வன விலங்குகள் உயிருடன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவை அழிந்து வரும் உயிரினங்கள் என்பது உறுதி செய்யப்பட்ட நிலையில், அவற்றை அதிகாரிகள் மீண்டும் தாய்லாந்திற்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து, கைது செய்யப்பட்ட பயணியிடம் சுங்கத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தோல்வி பயத்தால் ரூ.2000 தருவதாக முதல்வர் வாக்குறுதி அளித்துள்ளார்
### முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் குற்றச்சாட்டு

**சென்னை, பிப். 14-**

வரும் சட்டசபை தேர்தலில் தோல்வி பயத்தால் முதல்வர் ஸ்டாலின் மகளிர் உரிமை தொகையை அதிகரித்துள்ளார் என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இம்மாதம் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணம் ரூ.3000 மற்றும் கோடைக்கால சிறப்பு தொகுப்பு ரூ.2000 என மொத்தம் ரூ.5000 நேற்று வரவு வைக்கப்பட்டது. இந்நிலையில், தோல்வி பயத்தால் மகளிர் உரிமைத்தொகை ரூ.2000 வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார் என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

இதுகுறித்து மேலும் கூறிய அவர்,"தேர்தலில் ஓட்டு வாங்க வேண்டும் என்பதற்காக மட்டுமே உரிமைத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார். அனைத்து குடும்ப அட்டைத்தாரர்களுக்கும் ரூ.1000 வழங்கப்படும் என வாக்குறுதி கொடுத்துவிட்டு தி.மு.க. வழங்கவில்லை. கல்விக்கடன் ரத்து, டீசல் விலை குறைப்பு போன்ற வாக்குறுதிகளை தி.மு.க. அரசு செய்து கொடுக்கவில்லை என்றார்.

## யார் இந்த தாரிக் ரஹ்மான்?

**டாக்கா, பிப். 14-**

வங்கதேசத்தின் 'டார்க் பிரின்ஸ்' என்றழைக்கப்படும் தாரிக் ரஹ்மான், 17 ஆண்டுகள் தலைமறைவுக்குப் பிறகு நாடு திரும்பியவுடன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளார்.

பிஎன்பி கட்சியின் நிறுவனர் ஜியாவுர் ரஹ்மானின் மகன்தான் தாரிக் ரஹ்மான் ஆவார். ராணுவ அதிகாரியான ஜியாவுர் ரஹ்மான், 1971 ஆம் ஆண்டு மேற்கு பாகிஸ்தான் படைகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்று பிரதமராகப் பொறுப்பேற்றார். 1981 ஆம் ஆண்டில் ஜியாவுர் ரஹ்மான் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவரது மனைவி கலீதா ஜியா கட்சிப் பொறுப்பையும் பிரதமர் பதவியையும் ஏற்றார்.

பெண் ஒருவர் பொது வெளியில் வருவதற்கே கடும் எதிர்ப்புகள் இருந்த காலகட்டத்தில், கலீதா ஜியாவை பிரதமராக்க அவரது மகன் தாரிக் ரஹ்மான் உறுதுணையாக இருந்தார். 1991 - 1996 மற்றும் 2001 முதல் 2006 வரையிலான காலகட்டத்தில் கலீதா ஜியா பிரதமராகப் பதவி வகித்த போது, முக்கிய முடிவுகள் அனைத்தையும் தாரிக் ரஹ்மானே எடுத்தார். நிழல் பிரதமராக வலம்வந்த தாரிக் ரஹ்மானை 'டார்க் பிரின்ஸ்' என்று வங்கதேச அரசியல் கட்சிகள் அழைத்தன.

2007 ஆம் ஆண்டு ராணுவத்தின் உதவியுடன் ஆட்சிப் பொறுப்பேற்ற இடைக்கால அரசு, ஊழல், பண மோசடி மற்றும் ஷேக் ஹசீனாவை கொலை செய்ய முயற்சி உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் தாரிக் ரஹ்மானை கைது செய்தது. சுமார் 17 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தாரிக் ரஹ்மான், மருத்துவக் காரணங்களுக்காக ஜாமீன் பெற்று, சிகிச்சைக்காக பிரிட்டன் நாட்டுக்குச் சென்றார்.

## பாகிஸ்தானில் நிலநடுக்கம்

**பலூசிஸ்தான், பிப். 14-**

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் வெள்ளிக்கிழமை காலை 6:30 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கடியில் 13 கிமீ ஆழத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டது. மேலும நிலநடுக்கத்தின் மையப்பகுதி மாகாணத்தின் குஸ்தார் நகரத்திலிருந்து வடகிழக்கே 86 கிமீ தொலைவில் இருந்தது என்று பாகிஸ்தான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக காலை 5.52 மணிக்கு குஸ்தாருக்கு தென்கிழக்கே 75 கிமீ தொலைவில் 33 கிமீ ஆழத்தில் 3.8 ரிக்டர் அளவிலான மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டது. பலுசிஸ்தானில் உள்ள ஜால் மாக்சி, ஜாஃபராபாத் மற்றும் நசிராபாத் ஆகிய பகுதிகளிலும் சிந்து மாகாணத்தின் பல மாவட்டங்களிலும் இந்த நிலநடுக்கமானது உணரப்பட்டது. பாகிஸ்தானில் தொடர்ந்து நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு 74,000 க்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதல் மனைவி இறந்துவிட்டால்
# 2-வது மனைவிக்கு ஓய்வூதியம் வழங்க முடியாது: ஐகோர்ட்

**சென்னை, பிப். 14-**

முதல் மனைவி இறந்துவிட்டால் 2-வது மனைவிக்கு ஓய்வூதியம் வழங்க முடியாது என்று உயர் நீதமன்ற தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்து சென்னை ஐகோர்ட் தீர்ப்பு அளித்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றி 2007-ம் ஆண்டு ஓய்வு பெற்றவர் ராதாகிருஷ்ணன். இவரது முதல் மனைவி வசந்தா. இவர் உயிரோடு இருக்கும் போதே, ரேவதி என்பவரை 1992-ம் ஆண்டு ராதாகிருஷ்ணன் 2-வது திருமணம் செய்துகொண்டார். 2009-ம் ஆண்டு இரு மனைவிகளின் பெயர்களையும் குடும்ப ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்க வேண்டும் என அவர் கொடுத்த கோரிக்கை மனுவை அரசு நிராகரித்தது. இதை எதிர்த்து அவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு விசாரணையின் போது, 'மனுதாரரின் முதல் மனைவி 2020-ம் ஆண்டு இறந்துவிட்டதால் 2-வது மனைவியை ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்க வேண்டும்' என வாதிடப்பட்டது.

இதை ஏற்றுக்கொண்ட தனி நீதிபதி, 2-வது மனைவியின் பெயரை ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்க உத்தரவிட்டார். இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், தமிழ்நாடு அக்கவுண்டன்ட் ஜெனரல் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், சி.குமரப்பன் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்ச் விசாரித்து பிறப்பித்த தீர்ப்பில் கூறியிருப்பதாவது:- ஓய்வூதியம் என்பது ஒரு நலத்திட்டம் என்பதால், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதி என்பது மிகவும் முக்கியமானது. முதல் மனைவி இருக்கும் போது, 2-வது திருமணம் செய்வது சட்டப்படி ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

முதல் மனைவி இருக்கும்போது 2-வது திருமணம் செய்வதை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் விதி தடை செய்கிறது. இது குற்றம் என்பதால், இந்த செயல்களை செய்பவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். மனுதாரரின் 2-வது திருமணம் சட்டவிரோதம் என்பதால், முதல் மனைவி இறந்த நிலையில் 2-வது மனைவிக்கு ஓய்வூதியம் கொடுக்கவேண்டும் என்பதை ஏற்க முடியாது. எனவே தனி நீதிபதி உத்தரவை ரத்து செய்கிறோம். இவ்வாறு நீதிபதிகள் கூறியுள்ளனர்.

## இன்று காதலர் தினம்:
# ரோஜா பூக்களின் விலை கடும் உயர்வு

**போரூர், பிப். 14-**

நாடு முழுவதும் இன்று காதலர்களால் காதலர் தினம் கொண்டாடப்படுவதை முன்னிட்டு ரோஜா பூக்களின் விலை கடும் உயர்ந்துள்ளது.

காதலர் தினம் இன்று 14-ந்தேதி (சனிக்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி காதலர்கள் பூங்கொத்து, ரோஜாப்பூ, வாழ்த்து அட்டைகள், சாக்லேட் உள்ளிட்ட வித விதமான பரிசு பொருட்களை கொடுத்து ஒருவருக்கொருவர் அன்பை பரிமாறிக் கொள்வது வழக்கம். காதலுக்கும் ரோஜாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மேலும் காதலின் அடையாளமாகவே ரோஜாப்பூ மாறிவிட்டதால் காதலர் தினத்தை முன்னிட்டு பூக்கடைகளில் வழக்கத்தை விட விற்பனை அதிகமாக இருக்கும்.

இந்த நிலையில் கோயம்பேடு பூ மார்க்கெட்டுக்கு கர்நாடக மாநிலம் பெங்களூரு மற்றும் ஓசூர் பகுதிகளில் இருந்து சிகப்பு, இளம் சிகப்பு, மஞ்சள், வெள்ளை உள்ளிட்ட பல்வேறு வண்ணங்களில் விதவிதமாக ரோஜா பூங்கொத்துகள் விற்பனைக்கு குவிந்துள்ளது. இதேபோல் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள வணிக வளாகங்களில் செயல்பட்டு வரும் பூக்கடைகளில் பூங்கொத்து விற்பனைகளை கட்டியுள்ளதோடு கோயம்பேடு மார்க்கெட்டை காட்டிலும் விலையும் 2 முதல் 3 மடங்கு வரை அதிகரித்து விற்பனை ஆகி வருகிறது. கோயம்பேடு மார்க்கெட்டில் பூங்கொத்து ஒரு பஞ்ச் (20 எண்ணிக்கை) விலை விபரம் வருமாறு:- சிகப்பு ரோஜா-ரூ.600, மஞ்சள் ரோஜா-ரூ.600, வெள்ளை ரோஜா-ரூ.400, ஆரஞ்சு ரோஜா-ரூ.500, பேபி பிங்க்-ரூ.400, ஜூமா லியா-ரூ.350.

## தங்கம், வெள்ளி விலை குறைவு

**சென்னை, பிப்.14-**

சென்னையில் ஆபரணத் தங்கம் மற்றும் வெள்ளியின் விலை வெள்ளிக்கிழமை குறைந்து விற்பனையானது. சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வெள்ளிக்கிழமை காலை சவரனுக்கு ரூ. 1,600 குறைந்து ரூ. 1,15,200-க்கு விற்பனையானது. வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ. 20 குறைந்து, ரூ. 280-க்கு விற்பனையானது. ஒரு கிலோ வெள்ளி ரூ. 2,80,000-க்கு விற்பனையானது.

சென்னையில் கடந்த சில மாதங்களாக தங்கத்தின் விலை அசுர வேகத்தில் உயர்ந்து லட்சத்தைக் கடந்து உச்சத்தில் விற்பனையாகி வருகின்றது. அந்த வகையில், கடந்த சனிக்கிழமை தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,360 உயர்ந்து ரூ.1,15,360-க்கு விற்பனையான நிலையில், திங்கள்கிழமை கிராமுக்கு ரூ.230 உயர்ந்து ரூ.14,650-க்கும், சவரனுக்கு ரூ.1,840 உயர்ந்து ரூ.1,17,200-க்கும் விற்பனையானது.

செவ்வாய்க்கிழமை சவரன் ரூ. 116,640-க்கும், புதன்கிழமை ரூ. 118,320-க்கும், வியாழக்கிழமை ரூ. 1,16,800-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வெள்ளிக்கிழமை காலை சவரனுக்கு ரூ. 1,600 குறைந்து ரூ. 1,15,200-க்கு விற்பனையானது. ஒரு கிராமின் விலை ரூ. 14,400. இதனிடையே, வெள்ளியின் விலை நான்கு நாள்களுக்கு பிறகு கிராமுக்கு ரூ. 20 குறைந்து, ரூ. 280-க்கு விற்பனையானது. ஒரு கிலோ வெள்ளி ரூ. 2,80,000 ஆக உள்ளது.

## மோடியின் அரசியல் வாழ்க்கை: வைரலான அதிபர் ட்ரம்ப் பேச்சு

**நியூயார்க், பிப். 14-**

கடந்தாண்டு அக்டோபர் மாதம் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப், "மோடி ஒரு சிறந்த மனிதர். அவர் என்னை நேசிக்கிறார்... அன்பு என்ற வார்த்தையை நீங்கள் வேறுவிதமாக எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. அவரது அரசியல் வாழ்க்கையை நான் அழிக்க விரும்பவில்லை'' எனப் பேசியிருந்தார். அதாவது காதல் என்ற வார்த்தையை அரசியல் ரீதியாகத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக நகைச்சுவையாக, "அவரது அரசியல் வாழ்க்கையை நான் அழிக்க விரும்பவில்லை'' என்று விளக்கம் அளித்தார்.

கடந்தாண்டு ரஷ்யாவிடமிருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவது தொடர்பான வர்த்தகப் பதற்றங்கள் நிலவியபோது ட்ரம்ப் இந்தக் கருத்தை முன்வைத்திருந்தார். தற்போது இந்தியா-அமெரிக்கா இடையே புதிய வர்த்தக ஒப்பந்தம் எட்டப்பட்ட நிலையில், பழைய வீடியோவின் ஒரு பகுதி மட்டும் வெட்டப்பட்டு மீண்டும் பகிரப்பட்டு வருகிறது.




சென்னை தலைமை செயலகத்தில் முதல்வலர் மு.க.ஸ்டாலின் காவல்துறை சார்பில் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஊக்குவிக்கும் வகையில் 2025-ம் ஆண்டிற்கான கலைஞர் காவல் கோப்பைகளை மாநில அளவில் முதல் 3 இடங்களை பெற்ற காவல் நிலையங்களுக்கு வழங்கினார். உடன் தலைமை செயலாளர் முருகானந்தம், கூடுதல் தலைமை செயலாளர் தீரஜ்குமார் பலர் உள்ளனர்.

### காவல்துறை மற்றும் தீயணைப்பு துறை சார்பில்

# ரூ.115 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை முதல்வர் திறந்து வைத்தார்

**சென்னை, பிப். 14-**

காவல்துறை மற்றும் தீயணைப்பு துறை சார்பில் ரூ. 115 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது., தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 82 கோடியே 9 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 35 கோடியே 02 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் 5 கோடியே 06 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மரபணு பிரிவுக் கட்டிடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், 2025-ஆம் ஆண்டிற்கான மூன்று சிறந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு கலைஞர் காவல் கோப்பைகளை வழங்கி, காவல் நிலைய அதிகாரிகளின் பயன்பாட்டிற்கென 27 கோடி ரூபாய் செலவில் 300 புதிய நான்கு சக்கர வாகனங்களையும், மோப்ப நாய் பிரிவின் பயன்பாட்டிற்காக 10 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் 60 புதிய வாகனங்களையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றிவரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள், பாதுகாப்பு பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், காவல் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை காவல்துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திடும் வகையில் 573.05 கோடி ரூபாய் செலவில் 3418 காவலர் குடியிருப்புகள், 73.65 கோடி ரூபாய் செலவில் 56 காவல் நிலையக் கட்டிடங்கள், 180.16 கோடி ரூபாய் செலவில் 31 காவல்துறை இதர கட்டிடங்கள் மற்றும் "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் 55.19 கோடி ரூபாய் செலவில் 253 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம், மேற்கு தாம்பரம், காந்தி சாலையில் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகத்திற்கு நேற்று அடிக்கல் நாட்டினார்.

சிறந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு கலைஞர் காவல் கோப்பை, தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு கலைஞர் காவல் கோப்பை வழங்கப்படுகிறது.

அதன்படி, 2025-ம் ஆண்டிற்கான கலைஞர் காவல் கோப்பை மாநில அளவில் முதலிடம் பெற்ற விழுப்புரம் காவல் நிலையத்திற்கும், இரண்டாம் இடம் பெற்ற திண்டுக்கல் நகர காவல் நிலையத்திற்கும், மூன்றாம் இடம் பெற்ற பொள்ளாச்சி காவல் நிலையத்திற்கும் வழங்கி சிறப்பித்தார்.

காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் மோப்ப நாய் பிரிவுகளுக்கான புதிய காவல் வாகனங்கள், காவல் துறை கட்டமைப்பை வலுப்படுத்தவும், அதன் செயல்திறனை மேம்படுத்தவும், மாநிலம் முழுவதும் உள்ள மாநகரங்கள், மாவட்டங்கள் மற்றும் பல்வேறு சிறப்பு பிரிவுகளின் பயன்பாட்டிற்கென 27 கோடி ரூபாய் செலவிலான 300 புதிய நான்கு சக்கர வாகனங்களையும், காவல் படை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், மோப்பநாய் பிரிவின் பயன்பாட்டிற்காக 10 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் 60 புதிய வாகனங்களையும் தமிழ்நாடு முதல்வர் கொடியசைத்து தொடங்கி வைத்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பல்வேறு தேர்வு வாரியங்கள் மூலம் தேர்வான

# 9,801 பேருக்கு புதிதாக பணிநியமன ஆணைகள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, பிப். 14-**

தமிழ்நாடு அரசின் பணியாளர் தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 9801 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார். மேலும் "திறன் 3600" என்ற இணையதளத்தையும், அனைத்து தேர்வு முகமைகள் மூலம் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான அறிவிக்கைகளை கைபேசி வழியாக அறியும் வண்ணம் "தேர்வுக்களம்" எனும் ஒருங்கிணைந்த கைபேசி செயலியையும் தொடங்கி வைத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (13.2.2026) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசின் பணியாளர் தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2025-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகுதி-IV உள்ளிட்ட போட்டித் தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 9801 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மேலும், சென்னை, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 8 குடியிருப்புகளை திறந்து வைத்து, சென்னை, செனாய் நகரில் 62 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து நவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ள அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, அரசு அலுவலர்கள் முன்னணி நிறுவனங்கள் வாயிலாக இணையவழியில் தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட "திறன் 3600" என்ற இணையதளத்தையும், அனைத்து தேர்வு முகமைகள் மூலம் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான அறிவிக்கைகளை கைபேசி வழியாக அறியும் வண்ணம் "தேர்வுக் களம்" எனும் ஒருங்கிணைந்த கைபேசி செயலியையும் தொடங்கி வைத்தார்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாடு இளைஞர்களுக்கு அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் கொடுத்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும் என்பதைத் தனது முழு முதற் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

அதன்படி, தற்போது வரை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் வாயிலாக 45,126 நபர்கள், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் வாயிலாக 24,927 நபர்கள், ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக 12,894 நபர்கள், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் வாயிலாக 11,244 நபர்கள், என தெரிவு முகமைகள் வாயிலாக மொத்தம் 94,191 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் பணியாளர் தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2025-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகுதி-IV உள்ளிட்ட போட்டித் தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 9,801 நபர்களில் இருந்து 4213 நபர்களுக்கு தமிழ்நாடு முதல்வர் நேற்று விழாவில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்பத்தூரில் இ.பி.எஸ். வரும் 21-ம் தேதி பிரச்சாரம்

**அம்பத்தூர், பிப். 14-**



அம்பத்தூரில் வருகிற 21-ம் தேதி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்று ஒவ்வொரு சட்டமன்ற தொகு தியிலும் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். அதன்படி வருகிற 21-ந் தேதி(சனிக்கிழமை) அம்பத்தூர் ராக்கி தியேட்டர் அருகே எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் மேற்கொள்கிறார். இதற்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான வி.அலெக்சாண்டர் செய்து வருகிறார். இது தொடர்பாக அவர், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டமும் நடத்தினார்.

# எகிப்து பிரமிடு கல்லறைகளில் தமிழ் - பிராமி எழுத்துக்கள்

### தி.மு.க. எம்.பி. கனிமொழி பெருமிதம்

**சென்னை, பிப். 14-**

எகிப்து பிரமிடு கல்லறைகளில் தமிழ்-பிராமி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறித்து தி.மு.க. எம்.பி கனிமொழி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

எகிப்து பிரமிடு கல்லறைகளில் தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட 2000 ஆண்டுகள் பழமையான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் ஆய்வாளர்கள் நடத்திய இந்த ஆய்வில், சுமார் 30 கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் 20 கல்வெட்டுகளில் தமிழ்-பிராமி எழுத்துக்கள் உள்ளன. 'சிகை கொற்றன்' என்ற தமிழ் வணிகரின் பெயர், 5 வெவ்வேறு பிரமிடுகளில் 8 முறை கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு கல்வெட்டில் 'சிகை கொற்றன் - வர கண்ட' (சிகை கொற்றன் இங்கே வந்து பார்த்தான்) என பொறிக்கப்பட்டுள்ளது. ரோமானிய காலத்தில் தமிழ் வணிகர்கள் கடல் கடந்து எகிப்து சென்று, அங்கிருந்து உள்நாட்டுப் பகுதிகளுக்கும் பயணம் செய்துள்ளனர் என்பதற்கு இதுவே முதல் நேரடி ஆதாரமாகும். இந்தநிலையில், எகிப்து நாட்டில் பழமையான கல்வெட்டுகளில் தமிழ் பிராமி எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள செய்தி மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது என தி.மு.க. எம்.பி.கனிமொழி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், எகிப்து நாட்டின் 'மன்னர்களின் பள்ளத்தாக்கு' பகுதியில் அமைந்துள்ள பிரமிடுகளில் உள்ள பழமையான கல்வெட்டுகளில் தமிழ் பிராமி எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள செய்தி மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. பழந்தமிழர்களின் கடல் கடந்த பயணங்கள், பன்னாட்டு வணிகத் தொடர்பு மற்றும் உலகின் பிற நாகரிகங்களுடனான உறவு குறித்து மேலும் பல புதிய ஆய்வுகள் மேற்கொள்வது காலத்தின் கட்டாயமாகத் தோன்றுகிறது. அப்படியான ஆய்வுகள், பண்டைய தமிழ் நாகரிகத்தின் சிறப்புகளைப் பறைசாற்றுவதுடன், இந்த நவீன யுகத்திலும் சரியான வெளியுறவுக் கொள்கைகளை வகுத்து, இந்த நாட்டின் பாதுகாப்பை - பொருளாதார நலனை - தனித்துவத்தை உறுதி செய்ய முடியாமல் திணறும் மத்திய பா.ஜ.க. அரசுக்கு பாடம் கற்றுக்கொள்ள உதவிகரமாக அமையும் என அதில் பதிவிட்டுள்ளார்.

### புதிய பிரதமர் அலுவலக கட்டிடம்:

# 'சேவா தீர்த்' வளாகத்தை திறந்து வைத்தார் பிரதமர்

**சென்னை, பிப். 14-**



புதிய பிரதமர் அலுவலகம், தேசியப் பாதுகாப்பு கவுன்சில் செயலகம் மற்றும் அமைச்சரவை செயலகம் உள்ளிட்டவை அடங்கிய சேவா தீர்த் வளாகத்தைப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.

தலைநகர் தில்லியில் அரசுக் கட்டிடங்களை மறுநிர்மாணம் செய்யும் பணி நடைபெற்று வந்தது. பிரதமர் அலுவலகத்தின் புதிய கட்டத்தின் பெயர் "சேவா தீர்த்" (சேவைத் தலம்) என்றும், கர்த்தவ்ய பவன் (மத்திய அரசின் தலைமைச் செயலகம்) என்றும் அழைக்கப்படுகிறது. இதன் கட்டுமான பணிகள் நிறைவடைந்த நிலையில் நேற்று பிரதமர் மோடியால் புதிய கட்டிடம் திறக்கப்பட்டுள்ளது.

புதிய வளாகத்தில் தேவநகரி எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட 'சேவா தீர்த்' என்ற பெயர்ப் பலகையும், அதன் கீழே 'நாக்ரிக் தேவோ பவ' (குடிமக்கள் கடவுளுக்கு நிகரானவர்) என்ற வாசகமும் எழுதப்பட்டுள்ளது. வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ள அமைச்சரவை செயலகம் மற்றும் தேசியப் பாதுகாப்பு கவுன்சில் செயலகத்தின் அலுவலகங்களை ஒன்றிணைத்து ரைசினியா மலையில் உள்ள தெற்குத் தொகுதியில் சேவா தீர்த் வளாகத்திற்குப் பிரதமர் அலுவலகம் மாற்றப்படும்.

இந்த நிகழ்ச்சியில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் மனோகர் லால், பிரதமர் அலுவலகத்தின் இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் மற்றும் பிரதமர் அலுவலக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். மக்களுக்கு சேவை செய்வதை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பணியிடம் இதுவாகும். இங்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் முடிவுகள் எடுக்கப்படும். இந்தியாவின் பொது அமைப்புகள் மாற்றத்தைக் கண்டுவருகின்றன. ஆட்சி நிர்வாகத்தின் சிந்தனையானது "அதிகாரம்' என்பதில் இருந்து "சேவை' என்பதாக மாறி வருகிறது.

பிரதமர் அலுவலகத்துக்கான பெயர் மாற்றம் என்பது நிர்வாக ரீதியிலான மாற்றமாக மட்டுமின்றி கலாசார மற்றும் தார்மிக ரீதியிலானதாகவும் அமைகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் ஆட்சி நிர்வாகப் பணியிடங்கள் கடமையையும், வெளிப்படைத் தன்மையையும் பிரதிபலிப்பதாக இது மாற்றப்பட்டுள்ளது. இனி ஒவ்வொரு பெயரும், ஒவ்வொரு கட்டடமும், ஒவ்வோர் அடையாளமும் மக்களுக்கு சேவை செய்வதையே குறிப்பதாக இருக்கும். இந்திய பிரதமர் அலுவலகம் 1947-க்கு பின் முதல்முறையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# மத்திய அமைச்சர் அமித்ஷா இன்று காரைக்கால் வருகை

### தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்பு

**டெல்லி, பிப். 14-**

காரைக்கால் பகுதிக்கு மத்திய அமைச்சர் அமித்ஷா இன்று வரவுள்ளதை தொடர்ந்து அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தமிழகம் மற்றும் காரைக்காலில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க 2 நாள் சுற்றுப்பயணமாக நேற்று (வெள்ளிக்கிழமை) திருச்சி வருந்தார். டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் நேற்று இரவு 9 மணிக்கு திருச்சி விமான நிலையம் வந்தார். பின்னர், அங்கிருந்து சாலை மார்க்கமாக திருச்சி கலெக்டர் அலுவலக சாலையில் உள்ள நட்சத்திர விடுதியில் இரவு தங்கி ஓய்வு எடுக்கிறார். பின்னர் இன்று 14-ம் தேதி இன்று (சனிக்கிழமை) காலை 10.30 மணிக்கு நட்சத்திர விடுதியில் இருந்து காரில் புறப்பட்டு திருச்சி விமான நிலையம் சென்று அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் காரைக்கால் வருகிறார்.

காரைக்கால் வரிச்சிக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அமைந்துள்ள ஹெலிபேடு மைதானத்தில் காலை 11 மணியளவில் அமித்ஷா வந்து இறங்குகிறார். பின்னர் அங்கிருந்து பாரதியார் சாலை மற்றும் திருநள்ளாறு சாலை வழியாக சென்று, நகராட்சி திடலில் மதியம் 11.30 மணியளவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி வைத்து பேசுகிறார். பொதுக்கூட்டம் முடிந்ததும் திருநள்ளாறு சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் முக்கிய பிரமுகர்களை சந்தித்து ஆலோசனை நடத்துகிறார். பின்னர் காரைக்கால் பா.ஜ.க கிளை கமிட்டி நிர்வாகி ஒருவர் இல்லத்தில் கட்சி கொடி ஏற்றி வைக்கிறார்.

பின்னர் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு மாலை 4 மணிக்கு மீண்டும் ஹெலிகாப்டர் மூலம் திருச்சிக்கு புறப்பட்டு செல்கின்றார். அமித் ஷாவின் வருகையையொட்டி சாலை முழுவதும் பா.ஜ.க-வினர் உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். மத்திய உள்துறை அமைச்சர் அமி த்ஷா பங்கேற்கும் பொதுக்கூட்டத்தில் சுமார் 12 ஆயிரம் பேர் கூடுவார்கள் என்று கூறப்படுகிறது. பாதுகாப்பு பணியில் 700 போலீசார் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இதற்காக புதுச்சேரியில் இருந்து 350 போலீசார் வர உள்ளனர். மேலும் 7 பட்டாலியன் துணை ராணுவ படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளார்கள்.

# என்னை நேசித்த மக்களுக்காக அரசியலுக்கு வந்தது தவறா..?

### சேலம் நிர்வாகிகள் கூட்டத்தில் விஜய் கேள்வி

**சேலம், பிப். 14-**



என்னை நேசித்த மக்களுக்காக அரசியலுக்கு வந்தேன். அது தவறா? சேலம் நடந்த நிர்வாகிகள் கூட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய் கேள்வி எழுப்பியுள்ளார்.

சேலம் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் சீலநாயக்கன்பட்டி புறவழிச் சாலையில் உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் இன்று நடைபெற்றது. இதில் பங்கேற்க 11 சட்டசபை தொகுதிகளில் இருந்து 5 ஆயிரம் நிர்வாகிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

த.வெ.க. நிர்வாகிகள் மத்தியில், பிரசார வேனில் நின்றபடி கட்சியின் தலைவர் விஜய் பேசியதாவது:- துணிச்சல் தான் எல்லாவற்றுக்கும் ஒரு அடிப்படை என்று சொல்வார்கள். அது ஒரு பவர். அது எங்கிருந்து ஆரம்பிக்கிறது தெரியுமா. நம்மை ஏளனமாக பார்க்கும்போது, எந்த விஷயத்திலும் கிண்டலும் கேலியுமாக பேசும்போது, அதையே நாம் பாசிட்டிவ்வாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஏ.. விஜய் வீட்டை விட்டு வெளியே வா, ஏ.. விஜய் பனையூரை விட்டு வெளியே வா என்று சொல்பவர்களிடம் நான் ஒன்று கேட்கின்றேன். எனது வீடு எங்கிருக்கிறது தெரியுமா, என்னை சீண்டி பார்ப்பவர்களுக்கு சொல்கிறேன். தமிழ்நாடு தான் என் வீடு. எங்கள் வீட்டில் 8 கோடி பேர் உள்ளனர். என் குடும்பம், என் உறவு, என் சொந்தம் அவர்கள்தான். அவர்களுடன் தான் நான் நிற்கப்போகிறேன்.

இந்த விஜய் உங்களிடம் ஓட்டு கேட்டு மட்டும் வரவில்லை. நீதி கேட்டும் வந்துள்ளேன். நான் என்ன தப்பு செய்தேன். என்னை நேசித்த மக்களுக்காக அரசியலுக்கு வந்தேன். அது தவறா? மற்ற கட்சிகள் மாநாடு நடத்த இடம் கொடுக்கிறார்கள். ஆனால், நமக்கு தாமாட்டேன் என்கிறார்கள். தரவும் விடமாட்டார்கள். இது என்ன நியாயம். இது ஸ்டாலின் சார் ஆப்பரேட்டிங் ப்ரொசிஜர்(SOP). நமக்கு எதிராக சூழ்ச்சி செய்பவர்கள் யார்? உங்களுக்கு தெரியும். அதனால் தான் உங்களிடம் கேட்கிறேன்.

செல்பே எடுக்காத கூட்டணி கணக்கும், காசு கொடுத்து ஓட்டு வாங்குவதும் நான் வந்தபிறகு எடுபடாது. ஆயிரம், 2 ஆயிரம், 5 ஆயிரம் என்று கொடுப்பார்கள். அது உங்கள் பணம். பணத்தை வாங்கிக் கொண்டு, அவர்கள் காதில் விசிலை ஊதி அனுப்புங்கள். இளம் தலைமுறையினருக்கும் ஒன்று சொல்ல வேண்டும். பணம் கொடுக்கும் கலாசாரத்தை ஒழிக்க வேண்டும். எல்லோரும் கையை நீட்டுங்கள். உறுதிமொழி ஒன்று எடுத்துக்கொள்வோம். "எங்கள் ஓட்டு எங்கள் உரிமை, எங்களை யாரும் விலைக்கு வாங்க முடியாது. எங்கள் ஓட்டு விசில் சின்னத்திற்கு. வேறு யாரையும் நம்பி ஏமாறமாட்டோம்.

நான்கே முக்கால் வருடம் கழித்து வீட்டுக்கு வீடு கதவை தட்டி உங்கள் கனவை சொல்லுங்கள் என்று கேட்கின்றனர். மக்கள் கனவு என்ன தெரியுமா. நான் சொல்லட்டுமா. கடந்த 3 தேர்தல்களில் மக்கள் உங்களுக்கு வாக்களித்தது, நல்லது செய்வீர்கள் என்றுதான். ஆனால், பெண்களுக்கும் பாதுகாப்பு கூட தரமுடியவில்லை. அதனால் மக்கள் விரோத தி.மு.க. அரசு நிலைக்கக்கூடாது என்பதுதான் மக்கள் கனவு. த.வெ.க. ஆட்சிக்கு வரவேண்டும் என்பதுதான் மக்கள் கனவு.

தமிழ்நாடு எப்போதும் டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் என்று முதல்வர் சொல்கிறார். ஆனால் உண்மையில் சட்டம் - ஒழுங்கில் அவுட் ஆப் கண்ட்ரோல், பெண்கள் பாதுகாப்பில் அவுட் ஆப் கண்ட்ரோல், இளைஞர்கள் வேலைவாய்ப்பில் அவுட் ஆப் கண்ட்ரோல், மொத்தத்தில் அவர்கள் ஆட்சியே அவுட் ஆப் கண்ட்ரோல்.

உண்மையிலேயே மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்றால், விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், செவிலியர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் போராட்டம் ஏன் நடக்கிறது? இவ்வாறு அவர் பேசினார்.

# மகளிர் உரிமை தொகையை விமர்சிக்க பா.ஜ.க.வுக்கு தகுதியில்லை: அமைச்சர்

**சென்னை, பிப். 14-**

மகளிர் உரிமை தொகையை விமர்சிக்க பா.ஜ.க.வுக்கு தகுதியில்லை என்றும், சூரியனை எந்த கையாலும் மறைக்க முடியாது என்றும் அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

சென்னை தேனாம்பேட்டையில் அமைச்சர் ரகுபதி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

சொல்லாததையும் செய்து இன்ப அதிர்ச்சி தருபவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் என்பதை நிரூபித்து விட்டார். மகளிருக்கு, பொங்கல் பரிசுத்தொகையோடு சேர்த்து கடந்த மாதம் ரூ,4000 கிடைத்தது. மகளிருக்கு அரசு கொடுத்த பணம் டாஸ்மாக்குக்கு வரவில்லை. இந்த மாதம் மகளிருக்கு சிறப்பு தொகுப்போடு சேர்த்து ரூ.5,000 கிடைத்துள்ளது. தி.மு.க. அரசை போன்று பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலும் உதவித்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் உரிமை தொகையை விமர்சிக்க பா.ஜ.க.வுக்கு தகுதியில்லை. எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமியின் வாயை முதல்வர் தைத்து விட்டார். ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை. அதுபோல சூரியனை எந்த கையும் மறைக்க முடியாது என்றார்.

# விஜய் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்ற வடமாநிலத்தை சேர்ந்தவர் உயிரிழப்பு

**சேலம், பிப். 14-**

சேலத்தில் நடந்த விஜய் பிரச்சாரக் கூட்டத்தில் மயக்கம் அடைந்த நபர் திடீர் என்று உயிரிழந்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


சேலம் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் சீலநாயக்கன்பட்டி புறவழிச்சாலையில் உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்க 11 சட்டசபை தொகுதிகளில் இருந்து 5 ஆயிரம் நிர்வாகிகள் அழைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் த.வெ.க. நிர்வாகிகள் மத்தியில், பிரசார வேனில் நின்றபடி கட்சியின் தலைவர் விஜய் பேசினார். இதனிடையே விஜய் பரப்புரை கூட்டத்தில் பங்கேற்ற மராட்டிய மாநிலத்தை சேர்ந்த வெள்ளிப் பட்டறை தொழிலாளியான சூரஜ் (37) என்பவர், வலிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். மயக்கம் அடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட சூரஜ், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். முன்னதாக விஜய் கூட்டம் நடைபெற்ற இடத்தில் கடும் வெயிலால் மயங்கியவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர். நிர்வாகிகள் கூட்டம் சாரை சாரையாக வெளியேறியதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




மக்கள் நல அரசாக, சமூக நீதி அரசாக, இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில், கல்வி வளர்ச்சியில், சுகாதாரக் கட்டமைப்பில் முதல் மாநிலம் என்ற பெருமைகொண்ட அரசாக தமிழ்நாடு அரசை தலைநிமிரச் செய்திருக்கிறார் நம்முடைய முதல்வர். அவருடைய சாதனை தொடர்வதற்கு தமிழ்நாட்டு மக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

**- திருமாவளவன்**




தமிழகத்தில் மகளிருக்கு 5 ஆயிரம் மட்டுமில்லை 50 ஆயிரம் கொடுத்தாலும் தி.மு.க. தோல்வியடையப் போவது உறுதி. தேர்தல் ஆணைய நடவடிக்கைகளைக் காரணம் காட்டி இதுபோன்ற அறிவிப்புகளை முதல்வர் அவசரகதியில் வெளியிட்டிருப்பதன் பின்னணியில் இருப்பது தி.மு.க. விற்கு ஏற்பட்டிற்கும் தேர்தல் தோல்வி பயம்தான் காரணம்.இல்லை.

**- டி.டி.வி.தினகரன்**



மகளிர் குடும்பத் தலைவர்களுக்கான மாதாந்திர உதவித்தொகை உயர்வு அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த மக்கள் நலத் திட்டத்தை முடக்க நினைக்கும் மத்திய அரசின் அணுகுமுறையை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கடுமையாகக் கண்டிக்கிறது. மாநில உரிமைகளையும் மக்களின் நலனையும் புறக்கணிக்கும் இந்த போக்கை ஏற்க முடியாது.

**- செல்வப்பெருந்தகை**



தேர்தலை காரணம் காட்டி ஒரு கையில் பணம் கொடுத்து மறு கையில் டாஸ்மாக் மூலம் பணம் பறித்து வருவாயைப் பெருக்க முயற்சிக்கிறது தமிழக அரசு. சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்து வாக்குகளை பெற, ஆட்சி அதிகாரத்தால் மக்கள் படும் பல்வேறு துன்பங்களை மறைக்க அரசின் முயற்சியை மக்கள் நன்கு அறிவார்கள்.

**- ஜி.கே.வாசன்**

திருச்சி மாவட்டத்தில்

# ரூ 4.81 கோடி மதிப்பீட்டில் புதிய தீயணைப்பு நிலைய கட்டிடம், ரூ 26.41 கோடி மதிப்பீட்டில் வணிகவரித்துறை அலுவலகக் கட்டிடம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி மூலம் திறந்து வைத்தார்



**திருச்சி,பிப்.14**

முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் அம்மாமண்டபம் பகுதியில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் சார்பில் ரூபாய் 4.81 கோடி மதிப்பீட்டில் தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளத்துடன் 10,820 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள புதிய தீயணைப்பு நிலைய கட்டிடத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி கண்டோன்மெண்ட் பகுதியில் ரூபாய் 26.41 கோடி மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் ஆறு தளங்களுடன் 1,17,467 சதுர அடி பரப்பளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரித்துறை அலுவலகக் கட்டடத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

முதலமைச்சர் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற விழா நிகழ்வில், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.பழனியாண்டி மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன் மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து புதிய கட்டடத்தை பார்வையிட்டனர். இந்நிகழ்வில், ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் சீனிவாசன்;, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் மத்திய மண்டல இயக்குநர் முரளி, மாவட்ட அலுவலர் வினோத், உதவி மாவட்ட அலுவலர்கள் லியோஜோசப், சத்யவரதன், நிலைய அலுவலர் சகாயராஜ், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழக நிர்வாக செயற்பொறியாளர் திருமலைசாமி, தீயணைப்பு பணியாளர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி கண்டோன்மெண்ட் பகுதியில் நடைபெற்ற விழா நிகழ்வில், மாநகராட்சி ஆணையர்லி.மதுபாலன்,, மாவட்ட வருவாய் அலுவலர்.ஆர்.பாலாஜி, வணிகவரித்துறை இணை ஆணையர்கள் ஜெயராமன் (நிர்வாகம்)காஞ்சனா (நுண்ணறிவு) ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து புதிய கட்டடத்தை பார்வையிட்டனர். இந்நிகழ்வில், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டிடங்கள்). அன்பரசி, திருச்சி வணிகவரித்துறை துணை ஆணையர்.மணியன், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



**நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் பேருந்து நிலையம் மற்றும் சந்தைப் பேட்டை கடைத்தெருவில் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் செல்வ செங்குட்டுவன் தலைமையில் குடும்ப அட்டைதாரர்களுக்குமகளிர் உரிமத்தொகைரூ 5 ஆயிரம் வழங்கிய தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து பட்டாசுகள் வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.**



**கரூர் மாவட்ட அதிமுக சார்பில் திமுக அரசை கண்டித்து கரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் கரூர் மாவட்ட அதிமுக செயலாளர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் தொண்டர்கள் பாஜக, பாமக, அமமுக, தமா கா, புரட்சி பாரதம், இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதி கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தொண்டர்கள் உட்பட 1500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.**

கந்தர்வகோட்டையில்

# அதிமுக கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம்



**கந்தர்வகோட்டை பிப்: 14**

கந்தர்வகோட்டையில் ஊராட்சி ஒன்றியம் அலுவலகம் எதிரே கிராம மக்களின் வாழ்வாதாரமான 125 நாள் வேலை உறுதிச் திட்டத்தை சீர்குலைக்க முயலும் திமுக அரசை கண்டித்து அதிமுக கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்

ஆர்ப்பாட்டத்திற்கு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கோமாபுரம் பாண்டியன் தலைமை வகித்தார்புதுக்கோட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அம்மா பேரவை மாவட்ட செயலாளர் நெடுஞ்செழியன் கந்தர்வகோட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நார்த்தாமலை ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார் நிகழ்வில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் யு குமார் முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர் சொக்கம்பேட்டை ரெங்கராஜன் மாவட்ட பிரதிநிதிகள் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கவிதா சிவா முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சங்கம் விடுதி பெருமாள் பகட்டுவான் ப்பட்டிசக்திவேல் அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் புனல் குளம் ராஜ்குமார் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அண்டனூர் இளங்கோவன் விலாரிப்பட்டி முத்துக்குமார் கண்ணுக்குடிப்பட்டி ஆனந்தகுமார் கோமாபுரம் பெரியசாமி மாவட்ட பாசறை செயலாளர் அருண் பிரசாத் மாவட்ட மாணவரணி இணைச் செயலாளர் கார்த்திக் மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் சாமி மணிவண்ணன் நகர கழக செயலாளர் செந்தில் அண்ட ணூர் நாகராஜ் கோமாபுரம் ஜெயக்குமார் அண்டனூர்நாகராஜ்மருங்கூரணி ராஜசேகர்

பாஜக இளைஞர் அணி மாநில துணைப் பொதுச் செயலாளர் தவமணி அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் ஒன்றிய கழக செயலாளர் முருகேசன் பாட்டாளி மக்கள் கட்சி ஒன்றிய செயலாளர் சங்கர் தாமாக நிர்வாகிகள் செல்வமணி சக்திவேல் கலந்து கொண்டனர் இறுதியில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கார்த்திக் மழவராயர் நன்றி கூறினார்

# திருச்சி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் 5377 பயனாளிகளுக்கு ரூ.13.57 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது

## பயனடைந்தோர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனமார்ந்த நன்றி

**திருச்சி,பிப்.14**

முதலமைச்சர்.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக உங்கள் தொகுதியில் முதலமைச்சர், இல்லம் தேடி கல்வி திட்டம், நான் முதல்வன் திட்டம், இன்னுயிர் காக்கும் - நம்மைக் காக்கும் 48, புதுமைப்பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், கள ஆய்வில் முதலமைச்சர் மற்றும் மக்களுடன் முதல்வர், கலைஞரின் கனவு இல்லம் போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்கள் கடைக்கோடியில் வாழக் கூடிய நபர்களுக்கும் சென்றடையும் வண்ணம் செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி விரைந்து மக்களை சென்றடைவதை உறுதி செய்திட வேண்டுமென்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில் இவ்வரசு செயல்பட்டு வருகிறது.



திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் நடைபெற்ற அரசுவிழாவில், வருவாய்த்துறை (சமூகபாதுகாப்புதிட்டம்), நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, தாட்கோ, மாவட்ட தொழில் மையத்தின், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் திட்டம், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம், ஊரக வளாச்சித் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூக நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 5377 பயனாளிகளுக்கு ரூபாய் 13.57 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்கே.என். நேரு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்.அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் வழங்கினார்கள்.



திருச்சி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் பெற்று பயனடைந்த பயனாளிகள் மாணவ, மாணவிகள் தெரிவித்ததாவது:



**பிரேமா, பொன்மலைபட்டி**

என்னுடைய பெயர் பிரேமா. நான் பொன்மலைபட்டியிலிருந்து வருகிறேன். எனது கனவர் இறந்து விட்டார். இதனால் என்னுடைய குடும்பத்தை நான் தான் கவனித்து கொண்டு வருகிறேன். இந்த தாலிக்கு தங்கம் திட்டம் பற்றி அறிந்தேன். இந்த திட்டம் எனது மகளின் திருமணத்திற்கு பெரும் உதவியாக உள்ளது. இந்த பயனுள்ள திட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்;.



**ஜெனிபர், அரியமங்கலம்**

என்னுடைய பெயர் ஜெனிபர் நான் அரியமங்கலத்திலிருந்து வருகிறேன். எனக்கு தந்தை இல்லை. இத்தகைய சூழ்நிலையிலும் இந்த உதவித்தொகை மிகவும் உறுதுணையாகவும், உதவிக்கரமாகவும் உள்ளது. இதனால் பல சிரமங்கள் எளிதாகி உள்ளது. இந்த உதவியினை மற்றும் பயனுள்ள திட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்;.

**கிருத்திகா, வைரிசெட்டிபாளையம்**



என்னுடைய பெயர் கிருத்திகா. நான் வைரிசெட்டிபாளையத்திலிருந்து வருகிறேன். நான் கலப்பு திருமணம் செய்துகொண்டேன். இந்த தாலிக்கு தங்கம் திட்டம் குறித்து அறிந்தேன். இந்த திட்டத்தின் மூலம் 1 பவுன் தங்கம் பெற்று பயனடைந்தேன். இன்றைய காலகட்டத்தில் இது மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த கலப்பு திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்த சிறப்பான திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துகொள்கிறேன்;.

**திவ்யா, அந்தநல்லூர்**



என்னுடைய பெயர் திவ்யா, நான் அந்தநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இந்த தாலிக்கு தங்கம் திட்டம் குறித்து அறிந்து கொண்டேன். இது என்னுடைய மகளின் திருமணத்திற்கு பெரும் உதவியாக இருக்கிறது. இது எனது மகளின் எதிர் காலத்திற்கு நல்ல பயனுள்ள திட்டமாக அமைந்துள்ளது. இந்த சிறப்பான திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துகொள்கிறேன்;.

**தொகுப்பு:**

**உதவி இயக்குநர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**திருச்சி மாவட்டம்**

திருவாரூரில்

# ஒன்றிய பிஜேபி அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம்



**திருவாரூர் பிப் 14**

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறகணித்து,தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுத்து வரும் ஒன்றிய பிஜேபி அரசையும்,அதற்கு துணை போகும் அதிமுகவையும் கணடித்து நேற்று முன்தினம் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து நகர, ஒன்றிய பகுதிகளில் திமுக சார்பில் கண்ட ஆர்ப்பாட்டம் நடத்த தலைமைகழகம் உத்தரவிட்டுருந்தது.அந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை கொரடாச்சேரி ஒன்றியத்தில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே கலைவாணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைப்பெறறது.அதேபோல் திருவாரூர் ஒன்றிய கழகம் சார்பில் புலிவலம் பேருந்து நிலையம் முன்பு ஒன்றிய செயலாளர் புலிவலம் தலைமையில் நடைப்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ்,மாவட்ட பிரதிநிதிகள் கருணாகரண்,குருநாதன்,ஒன்றிய கழக பொருளாளர் தியாகராஜன்,துணை செயலாளர்கள் செந்தில்,தங்கையன், சங்கீதா செந்தில்குமார், காங்கிரஸங கட்சி மாவட்ட தலைவர் நீலன் அசோகன்,பொதுச்செயலாளர் சுகுமார்,துணைதலைவர் பாலாஜி,மாவட்ட் ஒபிசி தலைவர் ரமேஷ் குமார் மற்றும் கூட்டணி கட்சிகளான விசிக,மதிமுக, சிபிஐ,சிபிஎம்,திராவிடர் கழகம், மக்கள் நீதிமையம்,தமிழக வாழ்வுரிமை கட்சி,எஸ்டிபிஐ, மனிதநேய மக்கள் கட்சி,இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஆம்புலன்சுக்கு வழிவிடுங்கள்

# ஆதிகும்பேஸ்வரர் கோவிலில் இன்று நாட்டியஞ்சலி விழா



**தஞ்சாவூர் பிப்.14-**

கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரர் சுவாமி கோவிலில் மகாசிவராத்திரியை முன்னிட்டு இன்று நாட்டியஞ்சலி விழா தொடங்க உள்ளது. இது குறித்து குடந்தை நாட்டியாஞ்சலி அறக்கட்டளை தலைவர் சந்திரசேகரமூப்பனார் கூறியதாவது :-

ஆண்டுதோறும் மாசி மாத சிவராத்திரியை முன்னிட்டு நாட்டியாஞ்சலி விழா நடைபெறுவது வழக்கம். அதன்படி 23ஆம் ஆண்டாக 14ஆம் தேதி முதல் 16ஆம் தேதி வரை மூன்று நாட்கள் நாட்டியாஞ்சலி விழா நடைபெற உள்ளது.

இதில் அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, லண்டன், இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து சுமார் 500க்கும் அதிகமான நடன கலைஞர்கள் கலந்து கொண்டு பரதம், குச்சிப்புடி, மோகினி ஆட்டம், ஒடிசி, கதகளி உள்ளிட்ட பல்வேறு நாட்டியங்களை அரங்கேற்றுகின்றனர்.

தினமும் மாலை 6.30 மணி முதல் இரவு 12 மணி வரை நாட்டியாஞ்சலி நடைபெறும். இந்நிகழ்ச்சியில் உயர் நீதிமன்ற நீதிபதி சுரேஷ் குமார், சிட்டி யூனியன் வங்கி நிர்வாக இயக்குனர் காமகோடி, சென்னை ஸ்ரீ சிலம்பம் அகாடமி கலை மாமணி பிரியா முரளி, சிட்டி யூனியன் வங்கி பாலசுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் சிவக்குமார், செயலர் ராஜகோபாலன், உதவி செயலர் சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

கண், ரத்த தானம் செய்வீர்

# தஞ்சாவூர் மாவட்ட பள்ளிக் கல்வித் துறை சார்பில் முதுகலை ஆசிரியர்கள், இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணை

## உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்



**தஞ்சாவூர்,பிப்.14**

தஞ்சாவூர் மாவட்டம் பெசன்ட் லாட்ஜ் அரங்கில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் முதுகலை ஆசிரியர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பணிநியமன ஆணையினை வழங்கினர்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்ற 33 முதுகலை ஆசிரியர்கள் மற்றும் தமிழ்நாடு பணியாளர் தேர்வு ஆணையம் மூலம் நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்ற 7 இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர் ஆகியவர்களுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் ஆணைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர்.ச.முரசொலி, மாவட்ட வருவாய் அலுவலர்தெ.தியாகராஜன் சட்டமன்ற உறுப்பினர்கள்.துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர்.சண்.இ ரா ம நா தன் துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்ட கல்வி அலுவலர் இ.மாதவன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக நேர்முக உதவியாளர் (இடைநிலை) .இ.அருள்மொழி இராஜகுமாரி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பெரம்பலூர் அருகே வேப்பூரில்

# திமுக மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



**பெரம்பலூர், பிப். 14**

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் வேப்பூர் பஸ் நிலையத்தில் வேப்பூர் ஒன்றிய திமுக மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் ஒன்றிய அரசை கண்டித்தும் அதற்கு துணை போகும் அதிமுகவை கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு வேப்பூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் மதியழகன் தலைமை தாங்கினார் வேப்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மருவத்தூர் ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட துணை செயலாளர் சன் சம்பத் லப்பைக்குடிக்காடு கழக செயலாளர் ஜாஹிர் உசேன் மாவட்ட மருத்துவமனை அமைப்பாளர் கருணாநிதி மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கவியரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்முன்னாள் மாவட்ட செயலாளர் குன்னம் ராஜேந்திரன் குன்னம் தொகுதி மேற்பார்வையாளர் ஏ கே அருண் காங்கிரஸ் மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் விசிக மாவட்ட செயலாளர் அன்பானந்தன்.முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பிரபாசெல்லப்பிள்ளை.விசிக முன்னாள் மாவட்ட செயலாளர் கலையரசன் சிபிஎம் மாவட்ட செயலாளர் ரமேஷ் மதிமுக ஒன்றிய செயலாளர் ரங்கராஜ் விசிக ஒன்றிய செயலாளர் வரதராஜன். உட்பட பலர் கண்டன உரையாற்றினர் முடிவில் வேப்பூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகு நீலமேகம் நன்றி உரையாற்றினார்.

# அரசு பணத்தில் தேர்தல் பணிகளை திமுக செய்கிறது: திருவாரூரில் முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ பேட்டி



**திருவாரூர் பிப் 14**

தேசிய ஊரக வேலை திட்டத்தை திமுக அரசு சீர்குலைக்க முயல்வதாகக் கூறி அதனைக் கண்டித்து திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ தலைமையில் அதிமுக கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அதிமுக மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ தலைமை வகித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாரதிய ஜனதா கட்சி மாவட்டத் தலைவர் வி.கே.செல்வம், அம்மா மக்கள் முன்னேற்ற கழக மாவட்டச் செயலாளர் எஸ்.காமராஜ், தமிழ் மாநில காங்கிரஸ் கொள்கை பரப்பு செயலாளர் கரிகாலன், பாட்டாளி மக்கள் கட்சி இளைஞர் அணி செயலாளர் சிவக்குமார், வளரும் தமிழக கட்சி இளைஞரணி செயலாளர் பாவா, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் மாவட்டப் பொருளாளர் கனகராஜ், அதிமுக நகர செயலாளர்கள் திருவாரூர் ஆர்.டி.மூர்த்தி, கூத்தாநல்லூர் ராஜசேகர், ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.யு.மணிகண்டன், செந்தில்வேல், மாவட்டப் பொருளாளர் ஏ.என்.ஆர் பன்னீர்செல்வம், மாவட்ட அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் கலியபெருமாள், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ரயில் பாஸ்கர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சின்னராஜ் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவாரூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ கூறியதாவது,

ஏழை எளிய மக்களுக்கு ஏராளமான நலத்திட்ட உதவிகளையும், கூடுதலான நிதி உதவிகளையும் செய்ய வேண்டும் என்பது அதிமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் கருத்தாகும். மக்களுக்கு போகும் பணத்தை தடுக்கும் எண்ணம் அதிமுக மற்றும் அதன் கூட்டணி கட்சியினருக்கு கிடையாது. முதலமைச்சர் தவறாக சொல்கிறார். பிப்ரவரி மார்ச், ஏப்ரல், ஆகிய மூன்று மாதங்களுக்கும் தலா ரூ 1000 வீதம் 3 ஆயிரமும், கோடைகால சிறப்பு தொகையாக 2000 ரூபாய் வழங்குவதாக முதல்வர் கூறியுள்ளார். இவரது ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளாகவே மே மாதம் வந்தது. கோடை காலமும் இருந்தது.

இதற்கெல்லாம் ஏன் நிவாரணம் கொடுக்கவில்லை மாறாக, அரசு பணத்தை தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்துகிறார் என்பது சரியானது. நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் அதிமுக கூட்டணி அதிக இடங்களில் வென்று ஆட்சியைப் பிடிக்கும். இவ்வாறு முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ தெரிவித்தார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

கீழப்பழுவூரில்

# மொழிப்போர் தியாகி சின்னசாமி அரங்கம்: முதல்வர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்



**அரியலூர், பிப்.14**

சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அங்கிருந்தவாறு காணொலி காட்சி வாயிலாக அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூரில் ரூ.3 கோடியில் கட்டப்பட்டுள்ள மொழிபோர் தியாகி சின்னசாமி அரங்கத்தினை திறந்து வைத்தார்.அதனைத் தொடர்ந்து , புதிதாக கட்டப்பட்டுள்ள அந்த அரங்கத்தில் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், குத்து விளக்கேற்றி வைத்து, சின்னசாமி திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி அரங்கினைப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர்கள் அரியலூர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் க. சொ.க.கண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, வருவாய் கோட்டாட்சியர் பிரேமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுருளிபிரபு, உதவி அலுவலர் ஸ்ரீராம், வட்டாட்சியர் முத்துலட்சுமி, மொழிப் போர் தியாகி சின்னசாமியின் துணைவியர் கமலம், மகள் திராவிடச் செல்வி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில்

# அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



**நாகப்பட்டினம்,பிப்.14-**

நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் ஒன்றிய அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் கிராம புற மக்களின் 125-நாள் வேலை உறுதி திட்டத்தை சீர்குலைக்க முயலும் தமிழக அரசை கண்டித்து ஒன்றிய அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கழக அமைப்பு செயலாளர் எஸ்.ஆசைமணி தலைமை வகித்தார்.திருமருகல் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.ராதாகிருட்டிணன் எம்.பக்கிரிசாமி ஆகியோர் முன்னிலை வகித்து ஆளும் திமுக அரசை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பினர். இதில் தலைமைக் கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் திட்டச்சேரி பேரூர் செயலாளர் அப்துல் பாசித் நன்றி கூறினார்.

**மழைநீர் உயிர்நீர்**



கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் கு.விமல்ராஜ் தமிழ்நாடு அரசின் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2025-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வ.யுரேகா மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ராஜூ ஆகியோர் உள்ளனர்.

வேதாரண்யத்தில்

# 125 நாள் வேலை உறுதி திட்டத்தில் குளறுபடியை கண்டித்து அதிமுகவினர் ஆர்ப்பாட்டம்




**வேதாரண்யம் பிப் 14**

வேதாரண்யம் பேருந்து நிலையம் எதிரே கிராமபுற மக்களின் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தை சீர்குலைக்க நினைக்கும் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசைக் கண்டித்து; அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

முன்னாள் அதிமுக அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ஓ.எஸ்.மணியன் எம்.எல்.ஏ தலைமையில் நகரச் செயலாளர் நமசிவாயம், ஒன்றியச் செயலாளர்கள் சுப்பையன், கிரிதரன்; கட்சியின் மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் மற்றும் பெண்கள் உள் ;ளிட்ட அதிமுகவினர் கையில் பதாகைகளை ஏந்தி திமுகவிற்கு எதிராக முழக்கங்களை எழுப்பி 300க்கு மேற்பட்; டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியன் பேசியதாவது ஓட்டுக்காகவும் மக்களை ஏமாற்றுவதற்காகவும் முதல்வர் ஸ்டாலின் ரூ 5000 பணத்தை கொடுத்து டாஸ் மார்க் சரக்கு விற்பனை ஏற்பாட்டுக்கு முதல்வர் ஸ்டாலின் வழி வகுத்துள்ளார் நடைமுறையில் உள்ள திட்டத்தை தேர்தல் அன்று கூட வழங்கலாம் தேர்தல் ஆணையம் அதற்கு அனுமதி அளிக்கிறது

முதல்வர் ஸ்டாலின் பெருமையை காட்டுவதற்காக மூன்று மாத பணத்தை மகளிருக்கு கொடுத்துள்ளார் தேர்தலுக்காக ஸ்டாலின் கோடைகால உதவித் தொகையை மகளிர்க்கு வழங்கி உள்ளார் ஆட்சிக்கு வந்த நான்கு ஆண்டுகளில் கோடை காலம் வரவில்லையா .இ.ந்த ஆண்டுதான் கோடை காலம வந்துள்ளதா மகளிர் உரிமைத் தொகை கொடுக்கும் போது அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கி இருக்க வேண்டும் ஆனால் 2 கோடியே 3 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்காமல் ஒரு கோடி பேருக்கு மட்டும் உதவித்தொகை வழங்கிவிட்டு மற்றவர்களுக்கு தகுதி இல்லை என்றார் தேர்தல் வந்து விட்டதால் தற்போது 30 லட்சம் பேருக்கு தகுதி வந்து விட்டது என்று கூறி மகளிர் உதவித் தொகையை வழங்கி உள்ளார் இதன் மூலம் 30 லட்சம் பேர் ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக முதல்வர் ஸ்டாலின் ஒத்துக்கொண்டு உள்ளார் இவ்வாறு ஓ.எஸ்.மணியன் பேசினார்

**குளித்தலை அடிஷனல் டிஸ்ரிக்ட் முன்சீப் கோர்ட்டார் அவர்கள் சமூகம்**
**அசல் வழக்கு.எண்.86/2017**
**இ.ம.எண்.09/2025**

அருள்மிகு சக்கலாம்மன் திருக்கோயில் நிர்வாகி மற்றும் ஜமீன்தார் அச்சுதராமன்.
– மனுதாரர்/ வாதி
– எதிர் –
தங்கவேல் செட்டியார் வகையறா
– எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்
சசீலா, 36/2025, த/பெ.ஏழுமலை, இந்து வசிப்பிடம் நெ.69/2, 8–வது கிராஸ் (கிழக்கு), தில்லை நகர், திருச்சி– 620 018.
– 16 ஆம் எதிர்மனுதாரர்
மனுதாரர்/ வாதி தரப்பில் கொடுத்த அறிவிப்பு

அசல் வழக்கில் இறந்து போன 8–ஆம் பிரதிவாதியின் வாரிசு சேர்ப்பு மனு அனுமதிக்கப்பட்டு அதன் பேரில் அவசிய திருத்தல் மனு மேற்படி நம்பரில் தாக்கல் செய்யப்பட்டு வருகிற 17.02.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி நம்பரில் 16–ஆம் எதிர்மனுதாரராகிய தாங்கள் அன்றைய தினம் நேரிலோ வழக்கறிஞர் மூலமோ காலை 10.00 மணிக்கு சமூகம் கோர்ட்டில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என சமூகம் கோர்ட் உத்தரவின்படி இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**A.ஜாபர்சேட், B.A.,B.L.,**
**மனுதாரர்/வாதி வழக்கறிஞர், குளித்தலை.**

**திருவாரூர் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சமூகம்.**
**M.C.O.P. No. 66/2025**

சக்தி ஜெயந்த்.
– மனுதாரர்
மணிமாறன்,
த/பெ.சுப்பிரமணியன்,
எண்.2ஜே.65/9,
போலீஸ் காலனி, WD-24,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.
–2–ம் எதிர்மனுதாரர்
அறிவிப்பு

மனுதாரர் வாகன விபத்து நஷ்டஈடு கோரி 2–ம் எதிர்மனுதாரராகிய தங்கள் மீது மேற்படி நீதிமன்றத்தில் நஷ்டஈடு கோரி மனு தாக்கல் செய்து அதில் தங்களுக்கு நீதிமன்றம் மூலமாக அறிவிப்பு அனுப்பியும் அது தங்களுக்கு சர்வ் ஆகாததால் தங்களுக்கு நாளிதழ் மூலம் விளம்பர அறிவிப்பு கொடுக்க உத்தரவாகி மேற்படி வழக்கு வருகிற 16.03.2026–ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் தாங்கள் காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி தங்களுக்கு ஏதேனும் கட்சி இருப்பின் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிய கோரப்படுகிறது.

**த.மணிவண்ணன், M.A.,B.L.,**
**வழக்கறிஞர், திருவாரூர்.**

**எஸ்.எஸ். அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளி**
**10, கமலாலயம் தென்கரை, திருவாரூர்**

**பட்டதாரி தலைமை ஆசிரியர் தேவை**

பணியிடம் : பட்டதாரி தலைமை ஆசிரியர்
கல்வித்தகுதி : B.Sc / B.A, B.Ed., உடன் T.E.T பேப்பர் II தேர்ச்சி
ஐந்தாண்டு முன் அனுபவம்
(உரிய வழிகாட்டுதலின்படி)
இன சுழற்சி : OC

மேற்கண்ட பணியிடத்திற்கு தகுதியான நபர்கள் **19.02.2026** காலை 10 மணிக்கு அசல் சான்றிதழ் உடன் நேர்முகத்தேர்விற்கு வரவும்.

**இங்ஙனம்**
**செயலர்**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை**

ராசா,
த/பெ.சண்முகம்,
எண்13,அஜித் அவென்யூ,
திம்மாவரம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாட்சியர்,
மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது பாட்டி "சிவபாக்கியம்" க/பெ. அமிர்தலிங்கம் என்பவர் இறப்பு சான்று வேண்டல். மெயின்ரோடு, முவலூர் கிராமம், மயிலாடுதுறை மேற்படி விலாசத்தில் கடந்த 08.12.2009 மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யகோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாசியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருகேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்து கொள்ளலாம்

**ராசா, மனுதாரர்,**
**செங்கல்பட்டு வட்டம்.**

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப. 781/2025**
**நாள் : 105.12.2025**

S.சந்திரசேகரன்,
த/பெ.சாமிநாதன்,
553, குடியானத் தெரு,
அழகாபுத்தூர்,
கிருஷ்ணாபுரம்,
கும்பகோணம்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "சாமிநாதன்" என்பவர் கடந்த 27.03.1975 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

**S.சந்திரசேகரன்,**
**மனுதாரர், கும்பகோணம்.**

உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதி மன்றம், வருவாய் கோட்டாட்சியர், வேதாரண்யம்,
ந.க. 2634/2025/அ6
ந.க.1180/2025/ஆ2(இ.3888)

பக்கிரிசாமி, த/பெ. சிதம்பரம்,
11, அண்ணாநகர், ஒரடியம்புலம்,
தலைஞாயிறு 3-ம் சேத்தி கிராமம்,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.
...மனுதாரர்
உயர்திரு. வட்டாட்சியர், அவர்கள்,
வேதாரண்யம் ....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் தனது தாயார் வைரக்கண்ணு, க/பெ. சிதம்பரம் என்பவர் கடந்த 20.07.2007-ம் தேதி அன்று இறந்த விபரத்தை பதிவு செய்திட கோரி வேதாரண்யம் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளார் இந்த மனுவின் மீது யாருக்கேனும் ஆட்சேபணை ஏதாவது இருப்பின் 15 நாட்களுக்குள் தங்களது ஆட்சேபணைகளை வேதாரண்யம் வட்டாட்சியரிடம் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மனுதாரர்: பக்கிரிசாமி,
த/பெ.சிதம்பரம்,
11, அண்ணாநகர், ஒரடியம்புலம்,
தலைஞாயிறு 3-ம் சேத்தி கிராமம்,
வேதாரண்யம் வட்டம்,

உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதி மன்றம், வருவாய் கோட்டாட்சியர், வேதாரண்யம்,
ந.க.எண் 492/2025/அ6
e- 2922706/2025/ஆ2

பஞ்சவர்ணம்,
க/பெ.முத்துகிருஷ்ணன்,
ஜீவாநகர்,
நாகக்குடையான் கிராமம்,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.
...மனுதாரர்
உயர்திரு. வட்டாட்சியர், அவர்கள்,
வேதாரண்யம் ....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் தனது மகள் வனிதா என்பவர் கடந்த 12.08.1999-ம் தேதி அன்று பிறந்த விபரத்தை பதிவு செய்திட கோரி வேதாரண்யம் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளார் இந்த மனுவின் மீது யாருக்கேனும் ஆட்சேபணை ஏதாவது இருப்பின் 15 நாட்களுக்குள் தங்களது ஆட்சேபணைகளை வேதாரண்யம் வட்டாட்சியரிடம் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மனுதாரர்: பஞ்சவர்ணம்,
க/பெ.முத்துகிருஷ்ணன்,
ஜீவாநகர், நாகக்குடையான்
வேதாரண்யம் வட்டம்,

மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிமன்றம், கரூர்.
**O.S.No: 248 / 2025 I.A.No.1/2026**

யூனியன் பேங்க் ஆப் இந்தியா, கே.பரமத்தி கிளை, அதன் கிளை மேலாளர்,நெ.2/565,கோவை-திருச்சி ரோடு,கே.பரமத்தி,அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம். ...வாதி
//எதிர்//
1.K.கார்த்திகேயன் த/ பெ. காளிமுத்து, நெ.194, ஆதிரெட்டிபாளையம், கே. பரமத்தி, கரூர் மாவட்டம்.
2.P.காளிமுத்து, த/பெ. பழனி, நெ.194, ஆதிரெட்டிபாளையம் கே.பரமத்தி, கரூர் மாவட்டம். பணிபுரியும் முகவரி:- அலுவலக உதவியாளர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தாராபுரம்
...பிரதிவாதிகள்

மேற்படி வழக்கில் வாதி பிரதிவாதிகளுக்கு கொடுக்கும் அறிவிப்பு

மேற்படி பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தொகை வசூலிக்க வாதியால், இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அந்த வழக்கு வருகின்ற 07.03.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே தாங்கள் அன்று காலை 10.00 மணிக்கு கரூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளவும் தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

**P.THANGAVEL,** M.Sc., B.L.,
ADVOCATE, KARUR.

**அம்மாபேட்டை தேர்விலை பேரூராட்சி**
**தஞ்சாவூர் மாவட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)**
**கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2025–2026**

ந.க.எண். 39 /2026/அ1 நாள்: 11.02.2026

புத்தூர் முதல் குறுக்கு தெரு, புத்தூர் இரண்டாம் குறுக்கு தெரு, புத்தூர் நடுத்தெரு சந்து, புத்தூர் குறிச்சாகொள்ளை சந்து, காசியாப்பிள்ளை காலணி முதல் குறுக்கு தெரு மற்றும் காசியாப்பிள்ளை காலணி இரண்டாம் குறுக்கு தெரு மண்சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக அமைத்தல் பணி.

| மதிப்பீடு ரூ. | முன் வைப்பு தொகை | கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|
| ரூ. 58.00 இலட்சம் | ரூ. 58,000/– | 25.02.2026 மாலை 4.00 மணி |

மேலும் விவரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதளத்தை பார்க்கவும்.

**கு.குகன்,** செயல் அலுவலர் / ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அலுவலர்,
அம்மாபேட்டை தேர்வுநிலை பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்.
செ.ம.தொ.இ / 1067 / ஒப்பந்தப்புள்ளி / 2026

**அம்மாபேட்டை தேர்விலை பேரூராட்சி**
**தஞ்சாவூர் மாவட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)**
**கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2025–2026**

ந.க.எண். 39 /2026/அ1 நாள்: 11.02.2026

நாடான் தெரு, முடுக்கு தெரு, ஜோசியர் குடியிருப்பு, ரயிலடி ரோடு, விக்ரமன் வாய்க்கால் ரயிலடி தெரு குறுக்கு சாலை, ஜோசியர் குடியிருப்பு மற்றும் ரயிலடி ரோடு தெரு, சிமெண்ட் சாலைகள் பேவர் ப்ளாக் சாலைகளாக அமைத்தல் பணி.

| மதிப்பீடு ரூ. | முன் வைப்பு தொகை | கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|
| ரூ. 153.00 இலட்சம் | ரூ. 153,000/– | 25.02.2026 மாலை 4.00 மணி |

மேலும் விவரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதளத்தை பார்க்கவும்.

**கு.குகன்,** செயல் அலுவலர் / ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அலுவலர்,
அம்மாபேட்டை தேர்வுநிலை பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்.
செ.ம.தொ.இ / 1067 / ஒப்பந்தப்புள்ளி / 2026

**தமிழ்நாடு அரசு. பொதுப்பணித்துறை**
**கட்டடம் ( க & ப ) வட்டம் , தஞ்சாவூர்.**

**இனவிலை முறை**

குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.87/க.பொ./க. (க & ப) வட்டம். தஞ்சாவூர் /2025–2026/ நாள்: 10.02.2026.

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் கண்காணிப்பு பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடம் (க&ப) வட்டம், தஞ்சாவூர்–01 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 1 பணிக்கான ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றன.

1. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1 ஒரு மின் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள். 12.02.2026 முதல் 18.02.2026 மாலை 3.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணைய தளத்தில் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 18.02.2026 மாலை 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 19.02.2026 மாலை 3.00 மணி முதல்.

**கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து. சார்பில்**
**கட்டடம் (க & ப) வட்டம், தஞ்சாவூர்.**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.28/செ.ம.தொ.அ/தஞ்சாவூர். நாள்: 13.02.2026

**புதுக்கோட்டை மாவட்டம்**
**கீரமங்கலம் பேரூராட்சி**

ந.க.எண்.39/2025 நாள்: 11.02.2026

**வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

2026–2927–ம் ஆண்டிற்கு கீரமங்கலம் பேரூராட்சிக்கு தேவையான பராமரிப்பு பொருட்கள் வழங்கிடவும் மற்றும் பழுது சரிபார்த்தல் பணிகளை மேற்கொள்ளவும், 27.02.2026 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை மூடி முத்திரையிட்டப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீரமங்கலம் பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பெற்று கொள்ளப்படும்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்று பிற்பகல் 3.30 மணியளவில் திறந்து பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் பேரூராட்சி நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் அளித்திட தெரிவிக்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை 26.02.2026 அன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை படிவக் கட்டணம் ரூ.354/–ஐ அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்). திரு.K.C.சிவக்குமார், தலைவர், கீரமங்கலம் பேரூராட்சி, புதுக்கோட்டை மாவட்டம்.
(ஒம்) திரு.அ.சுந்தராஜன், செயல் அலுவலர், கீரமங்கலம் பேரூராட்சி, புதுக்கோட்டை மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.13/செ.ம.தொ.அ/புதுக்கோட்டை. நாள்: 13.02.2026

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண் .394/2025**

சுப்பிரமணியன்
த/பெ. வேலுகோனார்
மனுதாரர்
–எதிர்–
1.வட்டாட்சியர், திருத்துறைப்பூண்டி
2.சார்பதிவாளர், திருத்துறைப்பூண்டி
எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் மகன் அருண்குமார் என்பவர் கடந்த 03.06.1989 ஆம் தேதி அன்று வடக்குத்தெரு, எழிலூர், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, என்ற முகவரியில் பிறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் பிறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சுப்பிரமணியன்,
த/பெ. வேலுகோனார்
வடக்குத்தெரு,
எழிலூர், திருத்துறைப்பூண்டி

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண் .44/2025**

ரமேஷ், த/பெ. சந்தனம்,
356, பாரதிதாசன் தெரு,
27, செருமங்கலம்,
மன்னார்குடி தாலுக்கா
மனுதாரர்
–எதிர்–
1.வட்டாட்சியர், மன்னார்குடி
2.சார்பதிவாளர், மன்னார்குடி
எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் தாயார் விஜயம்பாள் என்பவர் கடந்த 30.11.2009 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**K. லோகநாதன்,** M.A., M.Phil., BL,
வழக்கறிஞர்
நீடாமங்கலம்

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண் .11/2026**

கமலா, க/பெ. மோகன்,
5/941, வடக்கு தெரு,
திருமக்கோட்டை–1, மன்னார்குடி TK
திருவாரூர் மாவட்டம்,
மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர்,
மன்னார்குடி
எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் தந்தை கோவிந்தராஜ் என்பவர் கடந்த 17.03.2016 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கமலா, க/பெ. மோகன்,
5/941, வடக்கு தெரு,
திருமக்கோட்டை–1,மன்னார்குடி TK
திருவாரூர் மாவட்டம்

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடுக் கோருரிமை தீர்ப்பாயம் மற்றும் சிறப்பு மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்**
**MCOP No. 1334/2023**

சுபலெட்சுமி மற்றும் நால்வர்
மனுதாரர்கள்
–எதிர்–
1.சரவணன், த/பெ. கலியமூர்த்தி
140–E8 காமகோடி ரங்கா நகர்,
சோலையப்பன் தெரு, கும்பகோணம்
2.செல்வம், த/பெ.சந்தானம்
சிவன் கோவில் தெரு, வடமட்டம்,
குத்தாலம் தாலுக்கா
3, 4 எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் மேற்படி நீதிமன்றத்தில் விபத்து இழப்பீடு கோரி மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் 3,4 எதிர்மனுதாரர்களை வழக்கில் சேர்த்து திருத்தம் செய்ய வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கானது வருகின்ற 18.02.2026 வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி 3,4 எதிர்மனுதாரர்கள் மேற்படி தேதியில் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் மேற்படி மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்

**E. மருதுபாண்டியன்** B.A., BL,
வழக்கறிஞர், நீடாமங்கலம்

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண் .177/2025**

காசிநாதன், த/பெ. வெங்கடாசலம்
155, மாரியம்மன்கோவில் தெரு,
இடையர்நத்தம்,
மன்னார்குடி தாலுக்கா
மனுதாரர்
–எதிர்–
1.வட்டாட்சியர், மன்னார்குடி
2.சார்பதிவாளர், உள்ளிக்கோட்டை
எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் தந்தை வெங்கடாசலம் என்பவர் கடந்த 20.08.1987 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

காசிநாதன், த/பெ. வெங்கடாசலம்
155, மாரியம்மன்கோவில் தெரு,
இடையர்நத்தம்,
மன்னார்குடி தாலுக்கா

### டி-20 உலகக் கோப்பை தொடரில்

# அதிவேக 100 ரன்கள் குவிப்பு: இந்திய அணி புதிய சாதனை

**புதுடெல்லி, பிப். 14-**

டி-20 உலகக் கோப்பையில் நமீபியாவுக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 6.5 ஓவரில் 100 ரன்களைக் கடந்து சாதனை படைத்தது. இதன்மூலம் டி-20 உலகக் கோப்பை வரலாற்றில் அதிவேகமாக 100 ரன்கள் குவித்த அணி என்ற சாதனையை இந்தியா படைத்தது.




**பந்துவீச்சு தேர்வு...**

டி-20 உலகக் கோப்பைத் தொடரின் 18வது லீக் போட்டி டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்றது. அதில் இந்தியா, நமீபியா அணிகள் மோதின. டாஸ் வென்ற நமீபியா அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் களமிறங்கிய இந்திய அணி அதிரடியாக ஆடியது. சஞ்சு சாம்சன் 8 பந்தில் 3 சிக்சர், ஒரு பவுண்டரி உள்பட 22 ரன் எடுத்து ஆட்டமிழந்தார்.

**அதிவேகமாக..**

அடுத்து இஷான் கிஷனுடன் திலக் வர்மா ஜோடி சேர்ந்தார். அதிரடியில் மிரட்டிய இஷான் கிஷன் பவர் பிளேவின் கடைசி ஓவரில் தொடர்ச்சியாக 4 சிக்சர்கள் மற்றும் ஒரு பவுண்டரி விளாசி அசத்தினார். அவர் 20 பந்தில் அரைசதம் விளாசி அசத்தினார். அதனால் இந்திய அணி 6.5 ஓவரில் 100 ரன்களைக் கடந்து சாதனை படைத்தது. இதன்மூலம் டி-20 உலகக் கோப்பை வரலாற்றில் அதிவேகமாக 100 ரன்கள் குவித்த அணி என்ற சாதனையை இந்தியா படைத்தது. கடந்த 2014-ம் ஆண்டு நடந்த உலகக் கோப்பை தொடரில் அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் நெதர்லாந்து அணி 7 ஓவரில் 100 ரன்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## சூர்யகுமார் யாதவ் பாராட்டு

வெற்றி குறித்து இந்திய அணி கேப்டன் சூர்ய குமார் யாதவ் கூறியதாவது:- இந்த ஆடுகளத்தில் பேட்டிங் செய்வது எளிதல்ல. ஆனால் சாம்சன், இஷான் கிஷன் தொடங்கிய விதம் இது ஒரு சுலபமான ஆடுகளம் என்பதை போல் உங்களுக்கு காட்டி இருக்கலாம். ஹர்திக் பாண்ட்யா, ஷிவம் துபே ஆகியோர் அமைத்த பார்ட்னர்ஷிப் மிகவும் முக்கியமானது. தொடர்ந்து விக்கெட்டுகள் விழுந்த பிறகு அவர்கள் ஆடிய விதத்தை பாராட்ட வேண்டும். இந்த தொடரில் ஒவ்வொரு போட்டியுமே முக்கியமானது. சிறு தடுமாற்றத்துடன் தான் இந்த தொடரை தொடங்கினோம். அதன் பிறகு நாங்கள் எங்களுடைய பாதையில் சரியாக செல்கிறோம் என்று நம்புகிறேன் என கூறினார்.

### டி-20 உலகக்கோப்பை லீக்:

# ஜிம்பாப்வேயிடம் ஆஸி. தோல்வி: சூப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெறுமா?




**கொழும்பு, பிப். 14-**

டி20 உலகக் கோப்பையில், ஆஸ்திரேலிய அணி 23 ரன்கள் வித்தியாசத்தில் கற்றுக்குட்டி அணியான ஜிம்பாப்வேயிடம் தோல்வியுற்று, மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது. தற்போதைக்கு, புள்ளிப் பட்டியலில் மூன்றாம் இடத்தில் இருக்கும் ஆஸ்திரேலிய அணி மீதமுள்ள இரண்டு போட்டிகளிலும் வெற்றியடைய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

மிகவும் நிதானமாக...

குரூப் பி பிரிவில், ஆஸ்திரேலியாவும் ஜிம்பாப்வே அணியும் கொழும்பில் நேற்று (பிப்.13) காலை 11 மணிக்கு மோதின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஆஸி. பந்துவீசியது. ஜிம்பாப்வே அணி 20 ஓவர்களில் 169/2 ரன்கள் எடுத்தது. ஆஸி. 19.3 ஓவர்களில் 146க்கு ஆல் அவுட்டானது. ஜிம்பாப்வே அணி பவர்பிளேவில் மிகவும் நிதானமாக விளையாடியது. பெரியதாக தூக்கி அடிக்காமல், 2 ரன்கள், 1 ரன்கள் என ஓடி ஓடி ரன்களைச் சேர்த்து, பவர்பிளே முடிவில் (6 ஓவர்களில்) 47/0 என்றிருந்தது. மாறாக, ஆஸ்திரேலிய அணியினர் கன்னாபின்னாவென பவர்பிளேயில் பேட்டினை சுழற்றி, 6 ஓவர்களில் 38/ 4 ரன்கள் மட்டுமே எடுத்தது.

ரன் ரேட் அதிகமாக...

ஆஸ்திரேலிய அணி அதே 4 விக்கெட்டுகளுடன் 14 ஓவர்கள் வரை 105/4 ரன்கள் எடுத்தது. க்ளென் மேக்ஸ்வெல் மற்றும் மாட் ரென்ஷா இருவரும் நன்றாக விளையாடினார்கள். ஜிம்பாப்வே அணியும் 118-1 ரன்கள் எடுத்திருந்தது. கிட்டதட்ட ஒரே அளவான ரன்கள் இருந்த நிலையில், ஆஸி. அணி 19.3 ஓவர்கள் ஆல் அவுட்டாக காரணம் பவர்பிளேவில் 4 விக்கெட்டுகளை இழந்ததுதான். வெற்றி பெற ஆஸ்திரேலிய அணிக்கு ரன் ரேட் அதிகமாக இருந்த காரணத்தினால், பேட்டர்கள் மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகி ஆட்டமிழந்தார்கள். ஜிம்பாப்வே அணியிடம் விக்கெட் இருந்த தைரியத்தினால் அதிரடியாக விளையாடி ரன்களை குவித்தார்கள்.

வென்றால் மட்டுமே...

இதே மாதிரிதான் 2024 உலகக் கோப்பையிலும் ஆஸ்திரேலிய அணி வெளியேறியது. இதுவரை 160-க்கும் அதிகமான இலக்கை சேஸ் செய்ய முடியாவில் 7 முறை டி20 உலகக் கோப்பையில் ஆஸ்திரேலிய அணி தோல்வியுற்றுள்ளது. இதிலிருந்து தெரிவது ஒன்றுதான். ஆஸ்திரேலிய அணியின் தேர்வு முறையும் பேட்டர்களின் அணுகுமுறையும் மோசமாக இருப்பதாலேயே இவ்வாறு நடக்கிறது. மீதமுள்ள இரண்டு போட்டிகளில் ஆஸ்திரேலியா வென்றால் மட்டுமே சூப்பர் 8 சுற்றுக்குத் தகுதிபெறும். அதற்கு, ஸ்டீவ் ஸ்மித் பிளேயிக் லெவனில் வர வேண்டும். இன்னொறு, அளவுக்கு அதிகமான ஒரே மாதிரியான ஆல் ரவுண்டர்களில் சரிபாதியை (ஸ்டாய்னிஸ், கிரீன், மார்ஷ், டிம் டேவிட்) நீக்கா விட்டாலும் ஆஸி.க்கு ஆபத்து தொடர்ந்து கொண்டேதான் இருக்குமென கணிக்கப்படுகிறது.

# காவிரியில் தமிழ்நாட்டிற்கு 2.5 டி.எம்.சி. நீரை கர்நாடக அரசு வழங்க வேண்டும்

### காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவு

**சென்னை,பிப்.14-**

காவிரியில் தமிழ்நாட்டிற்கு 2.5 டி.எம்.சி. நீரை கர்நாடக அரசு வழங்க வேண்டும் என்று காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;- நேற்று (13.02.2026) புதுடெல்லியில் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 48வது கூட்டத்தில், ஜெ.ஜெயகாந்தன், தமிழ்நாடு உறுப்பினர் மற்றும் அரசு செயலாளர், நீர்வளத்துறை மற்றும் ரா.சுப்பிரமணியன், தலைவர், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவு ஆகியோர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு உறுப்பினர், தற்பொழுது (13.02.2026) மேட்டூர் அணையின் நீர் இருப்பு 53.444 டி.எம்.சி ஆக உள்ளது எனவும், அணையிலிருந்து வினாடிக்கு 2,503 கன அடி நீர் குடிநீர், தொழிற்சாலை பயன்பாட்டிற்கும் மற்றும் சுற்றுச்சூழல் நீர் ஓட்டத்திற்காகவும் திறந்துவிடப்படுகிறது என்று தெரிவித்தார்.

கர்நாடக அணைகளின் நீர் இருப்பினை கருத்தில் கொண்டு, தமிழகத்திற்கு 2026, பிப்ரவரி முதல் மே மாதம் வரை வழங்கப்பட வேண்டிய சுற்றுச்சூழல் நீர் அளவான 10 டி.எம்.சி. நீரினை மாதத்திற்கு 2.5 டி.எம்.சி நீர் வீதம் சுப்ரீம் கோர்ட் ஆணையின்படி கர்நாடகம் பில்லிகுண்டுலுவில் உறுதிசெய்யுமாறு ஆணையத்தை வலியுறுத்தினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மகளிர் உரிமைத்தொகை அறிவிப்பு:

# முதல்வருக்கு கனிமொழி நன்றி

**சென்னை, பிப். 14-**

மகளிர் உரிமைத் தொகை அறிவிப்பு தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., மகளிரின் நலனில் தி.மு.க. அரசு அக்கறை கொண்டு செயல்படும் தமிழ்நாடு முதல்வர் அண்ணன் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் விரைவில் தேர்தல் அறிவிக்கப்படவுள்ளதையொட்டி மகளிர் உரிமைத் தொகை பெறும் மகளிரின் வங்கிக் கணக்குகளில் இம்மாதம் ரூ. 5,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரியுடன் மார்ச், ஏப்ரல் மாதத்துக்கும் சேர்த்து ரூ. 3,000 மற்றும் கோடைக்கால சிறப்புத் தொகுப்பாக ரூ. 2,000 வரவு வைக்கப்பட்டதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்புக்கு பெண்கள் மத்தியில நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

அரசியல் தலைவர்கள் பலரும் இதுபற்றி கருத்து தெரிவித்து வரும் நிலையில் தி.மு.க. எம்.பி. கனிமொழி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ. 3 ஆயிரத்துடன், கோடைக் காலச் செலவுகளைக் கருத்தில் கொண்டு சிறப்புத் தொகுப்பாக ரூ. 2 ஆயிரமும் சேர்த்து கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் கீழ் 1.31 கோடி மகளிருக்கு ரூ. 5 ஆயிரம் வழங்கியிருப்பதோடு, தமிழ்நாட்டு மகளிரின் நலனில் என்றும் அக்கறை கொண்டு செயல்படும் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைந்ததும், மகளிருக்கான உரிமைத் தொகை மாதந்தோறும் ரூ. 2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்திருக்கும் தமிழ்நாடு முதல்வர் அண்ணன் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி என்று எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### மகளிருக்கு சிறப்புத்தொகை:

# த.வெ.க. தலைவர் விஜய் கேள்வி

**சென்னை, பிப். 14-**

புதிதாகக் கோடைக் காலச் சிறப்புத் தொகை ரூ.2000 எனத் திடீரென அறிவித்தது எப்படி? என்று த.வெ.க. தலைவர் விஜய் கேள்வி எழுப்பியுள்ளார்.

மகளிர் வங்கிக்கணக்கில் ரூ.5 ஆயிரம் வரவு வைக்கப்பட்டது குறித்து விஜய் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;- "புதிதாகக் கோடைக் காலச் சிறப்புத் தொகை ரூ.2000 எனத் திடீரென அறிவித்தது எப்படி? இந்த ஆண்டு மட்டும்தான் கோடைக் காலம் வருகிறதா என்ன? வழக்கமாக மாதந்தோறும் 15ஆம் தேதி வரவு வைக்கப்படும் மகளிர் உரிமைத் தொகை, குறிப்பாக நேற்று 13ஆம் தேதி வரவு வைக்கப்பட்டு அறிவிக்கப்படுவது ஏன்?

இத்தனைக்கும் காரணம் வீதிக்கு வீதி மட்டுமில்லாமல், வீட்டுக்கு வீடு ஒலிக்கும் விசில் சத்தம்தான். குறிப்பாக, ஒட்டுமொத்த மகளிரின் விசில் சின்னத்திற்கான பேராதரவு அலையைக் கண்டு உண்டான அச்சம் மட்டுமே இதற்குக் காரணம். இப்போதுகூடப் பாருங்கள். ஒன்று மட்டும் உறுதியாகத் தெளிவாகிறது. நாம் மட்டுமே இவர்களுக்கு அச்சமூட்டச் செய்யும் ஆகப்பெரும் வெற்றிக்கான மக்கள் சக்தி. அது மட்டுமா? இவர்களை வலிய நல்லது செய்ய வைக்கும் வலிமையான அரசியல் பெருவிசையும் நாம்தான்.

அதுமட்டுமா? தி.மு.க. தனக்குப் போட்டியாகக் கருதுவதும் தன்னை வெல்லப் போகும் ஒரே மக்கள் சக்தி எனக் கருதுவதும் த.வெ.க.வைத் தான் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தமிழகத்தின் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி செய்துள்ளார். எனவே, என்னருமைத் தாய்மார்களே, அக்கா, தங்கைகளே, உங்கள் மகன், உங்கள் அண்ணன், உங்கள் தம்பி விஜயின் அரசியல் வருகையின் தாக்கத்தால் கிடைத்த இந்தத் உரிமைத் தொகையைச் சந்தோசமாக வாங்கிக்கொள்ளுங்கள்.

நம் ஆட்சி மலர்ந்ததும், அரசியல் ஆதாயத்திற்காகச் சுயநலமாகச் செயல்படும் இவர்களைப் போலன்றி, உண்மையான அக்கறையுடன் நம் மக்களுக்கு அனைத்து வகைகளிலும் அனைத்து வழிகளிலும் நல்லது மட்டுமே செய்வோம். அது உறுதி. தி.மு.க. அரசுக்குத் தேர்தல் தோல்விக்கான திகில் ஊட்டும் அளவிற்கு விசில் ஊதும் தமிழ்நாட்டு மகளிருக்கு என் மனமார்ந்த நன்றி. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வருகிற 18-ம் தேதி முதல் டெட் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

### ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

**சென்னை, பிப். 14-**

தமிழ்நாட்டில் ஆசிரியர் தகுதிக்கான டெட் தேர்வு தேதி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2026-ம் ஆண்டுக்கான டெட் தேர்வுக்கு ஆசிரியர் தேர்வு வாரிய இணைய தளம் மூலம் வருகின்ற 18-ம் தேதியிலிருந்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவித்துள்ளது.

1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரையில் பாடம் நடத்தக் கூடிய இடைநிலை, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித்தேர்வு (டெட்) நடத்தப்படுகிறது. இந்த தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டுமே ஆசிரியராக பணியாற்றுவதற்கு தகுதி படைத்தவர்கள் என்ற சூழல் உருவாகிவிட்டது. அந்த வகையில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரையில் தாள்-1 தேர்வும், 6 முதல் 8-ம் வகுப்பு வரையில் தாள்-2 தேர்வும் நடத்தப்படுகிறது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் ஆசிரியர் தகுதிக்கான டெட் தேர்வு தேதி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2026-ம் ஆண்டுக்கான டெட் தேர்வுக்கு ஆசிரியர் தேர்வு வாரிய இணைய தளம் மூலம் வருகின்ற 18-ம் தேதியிலிருந்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவித்துள்ளது. விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் ஏப்ரல் 10 2026 ஆகும்.

முதல் தாள் தேர்வு: தற்காலிக தேர்வு நாள்: ஜூலை 4-ம் தேதி, 2ஆம் தாள் தேர்வு: தற்காலிக தேர்வு நாள்: ஜூலை 5-ம் தேதி, விண்ணப்பதாரர் தங்களுடைய பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும். தேர்வு திட்டம், கட்டணம் செலுத்துதல் மற்றும் பிற விவரங்கள் தொடர்பான பிற தகவல்களுக்கு, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட விரிவான விவரங்களுக்கு https://www.trb.tn.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

## சின்னசாமி மைதானத்திற்கு அனுமதி

பெங்களூரு சின்னசாமி திடலில் கிரிக்கெட் போட்டிகள் நடத்துவதற்கு கர்நாடக அமைச்சரவை வியாழக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், நீதிபதி குன்ஹா தலைமையிலான குழுவின் அறிக்கை மற்றும் கர்நாடக அரசின் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு ஐபிஎல் போட்டியில் பெங்களூரு அணி முதன்முறையாக வெற்றி பெற்றதையடுத்து, கர்நாடக மாநிலத்தில் உள்ள சின்னசாமி திடலில் ஜூன் 4 ஆம் தேதி ஆர்சிபி சார்பில் வெற்றிக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த வெற்றிக் கொண்டாட்டத்தின்போது, எதிர்பார்த்ததைவிட அதிகளவில் ரசிகர்கள் கூடியதால் கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியாகினர். இதனைத் தொடர்ந்து, பாதுகாப்பு காரணங்களைக் கூறி, பெங்களூரு சின்னசாமி திடலில் கிரிக்கெட் போட்டிகளை நடத்த தடை விதிக்கப்பட்டது. இதனால், பெங்களூருவில் நடைபெறவிருந்த மகளிர் உலகக் கோப்பை போட்டி வேறு திடலுக்கு மாற்றப்பட்டது. இந்த நிலையில், , ஐபிஎல் 2026 போட்டிகளை சின்னசாமி திடலில் நடத்துவது குறித்து வியாழக்கிழமை தீவிர ஆலோசனை நடத்தப்பட்ட பிறகு, மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

### தி.மலையில் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த

# இரண்டு சிறுவர்கள் குடும்பத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரணம்

**சென்னை, பிப். 14-**

திருவண்ணாமலை மாவட்டத்தில் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் நிவாரணமாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;- திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், இளங்காடு கிராமம், தண்டலம் சாலையில் வசித்து வரும் முனியன் த/பெ.முனுசாமி என்பவர் நேற்று (13.02.2026) காலை 7.00 மணியளவில் புதிய வீடு கட்டுவதற்காக தனது பழைய தொகுப்பு வீட்டினை இடிக்க முற்பட்ட போது எதிர்பாராதவிதமாக கட்டிட இடிபாடுகளில் சிக்கி வந்தவதாசி வட்டம், வழூர் கிராமத்தைச் சேர்ந்த மேற்படி முனியன் என்பவரின் மகள் வழி பேரன்கள். அபினேஷ் (வயது 16) த/பெ.மோகன் மற்றும் முகேஷ் (வயது 14) த/பெ.மோகன் ஆகிய இரண்டு சிறுவர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமானச் செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.


மேலும், இச்சம்பவத்தில் காயமடைந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வந்தவாசி வட்டம், இளங்காடு கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீராம் (வயது 8) த/பெ. சீதாராமன் என்ற சிறுவனுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இரண்டு சிறுவர்களின் பெற்றோருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவனுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பிப்.23-ல் தமிழக அமைச்சரவை கூட்டம்

**சென்னை, பிப். 14-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வருகிற 23-ந் தேதி தமிழக அமைச்சரவை கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சியில் 5-வது ஆண்டின் இறுதி பட்ஜெட்டாக வருகிற 17-ம்தேதி இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது. சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ள நிலையில் அதன்பிறகு பொறுப்பேற்கும் புதிய அரசு முழுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்யும்.



அதன்படி, 2026-27ம் நிதியாண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை சட்டசபையில் வருகிற 17-ம்தேதி நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்ய உள்ளார். தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இடைக்கால பட்ஜெட்டில் பல்வேறு அறிவிப்புகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வருகிற 23-ம்தேதி மாலை 6.30 மணிக்கு தமிழக அமைச்சரவை கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் புதிய முதலீடுகளுக்கு அனுமதி தருவது தொடர்பாக ஆலோசிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

### 2014 முதல் 2022-ம் ஆண்டு வரை

# திரைப்படம், சின்ன திரை விருதுகளை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்




**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் திரைப்பட விருது, சின்னத்திரை விருதுகள் மற்றும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விருதுகள் வழங்கும் விழாவில் 2018-ம் ஆண்டுக்கான சிறந்த நடிகருக்கான விருதை வடசென்னை திரைப்படத்திற்காக நடிகர் தனுஷுக்கு வழங்கினார்.**

**சென்னை, பிப். 14-**

தமிழ்நாடு அரசின் திரைப்பட விருது, சின்ன திரை விருது மற்றும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விருதுகள் வழங்கும் விழாவில் சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள், சின்னத்திரை விருதுகள், சிறந்த குறும்படங்களுக்கு மாணவர் விருதுகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (பிப். 13) வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (பிப். 13) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் திரைப்பட விருது மற்றும் சின்ன திரை விருதுகள் வழங்கும் விழாவில் 2016-ஆம் ஆண்டு முதல் 2022-ஆம் ஆண்டு வரையிலான 7 ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள், 2014-ஆம் ஆண்டு முதல் 2022-ஆம் ஆண்டு வரையிலான 9 ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகள், 2015 – 2016 ஆம் கல்வியாண்டு முதல் 2021 – 2022 ஆம் கல்வியாண்டு வரையிலான 6 கல்வியாண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விருதுகளை வழங்கினார். முதல்வர் மு.க.ஸ்டாலின் இடைப்பட்ட ஆண்டுகளில் வழங்கப்படாமல் இருந்த விருதுகள் அனைத்தையும் வழங்கிட ஆணையிட்டுள்ளார். அதனை தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2016-ஆம் ஆண்டு முதல் 2022-ஆம் ஆண்டு வரையிலான 7 ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகளுக்கான சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள், 2014-ஆம் ஆண்டு முதல் 2022-ஆம் ஆண்டு வரையிலான 9 ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகளுக்கான சிறந்த நெடுந்தொடர்கள், கதாநாயகன், கதாநாயகி, ஆண்டின் சிறந்த சாதனையாளர், ஆண்டின் வாழ்நாள் சாதனையாளர் , சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள், 2015 – 2016 ஆம் கல்வியாண்டு முதல் 2021 – 2022 ஆம் கல்வியாண்டு வரையிலான 6 கல்வியாண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விருதுகளுக்கான விருதாளர்களும் தேர்வு செய்யப்பட்டனர்.தமிழ்நாடு அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக 2 லட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 லட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், சிறப்புப் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், பெண்களைப்பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் படத்திற்குச் சிறப்புப் பரிசு 1.25 லட்சம் ரூபாயும் வழங்கப்படுத்துடன், சிறந்த நடிகர், நடிகையர், சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சின்னத்திரை சிறந்த நெடுந்தொடர்களுக்கு முதல் பரிசாக 2 லட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 லட்சம் ரூபாயும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் பரிசாக 1 லட்சம் ரூபாயும், ஆண்டின் வாழ்நாள் சாதனையாளர் பரிசாக 1 லட்சம் ரூபாயும் வழங்கப்படுத்துடன், சிறந்த கதாநாயகன், கதாநாயகி, சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டின் சிறந்த இசையமைப்பாளர் விருது - ஏ.ஆர்.ரஹ்மானுக்கும், 2017 ஆம் ஆண்டின் சிறந்த கதை ஆசிரியர் விருது - ஹெச். வினோத்துக்கும் வழங்கப்பட்டன. விருதுதாளர்களான சிவகார்த்திகேயன், தனுஷ், ஐஸ்வர்யா ராஜேஷ், யோகி பாபு உள்ளிட்டோருக்கு விருது வழங்கி துணை உதயநிதி ஸ்டாலின் கௌரவித்தார்.

# நூற்றுக்கு நூறு சதவீதம் மக்களுக்கு நன்மை தருகின்ற அறிக்கையாக அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை இருக்கும் திண்டுக்கல் சி.சீனிவாசன் உறுதி





**திண்டுக்கல், பிப். 14-**

நூற்றுக்கு நூறு சதவீதம் மக்களுக்கு நன்மை தருகின்ற தேர்தல் அறிக்கையாக 2026 அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை இருக்கும் என திண்டுக்கல்லில் நடைபெற்ற விடியா தி.மு.க. அரசை கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் உறுதிபட பேசினார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க கிராம மக்களின் 125 நாள் வேலைத்திட்டத்தை சீர்குலைக்க முயலும் விடியா தி.மு.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திண்டுக்கல் மேற்கு மாவட்டம் திண்டுக்கல் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.என்.ராஜசேகரன் தலைமையில் திண்டுக்கல் உழவர் சந்தை அருகே நடைபெற்றது. நிகழ்ச்சியில் பொருளாளரும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் கண்டன உரையாற்றுகையில், மேலும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே கழகத்தின் தேர்தல் அறிக்கையிலும் 100 நாள் வேலை திட்டம் 150 நாளாக உயர்த்தப்படும் என தேர்தல் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல சென்ற சட்டமன்றத் தேர்தலில் மகளிர் உரிமைத்தொகையாக 1500 ரூபாய் வழங்கப்படும் என பொதுச் செயலாளர் எடப்பாடியார் அறிவித்து இருந்தார். அ.தி.மு.க.வை பொருத்தவரை செய்வதைத்தான் சொல்வோம் சொல்வதைத்தான் செய்வோம். நூற்றுக்கு நூறு சதவீதம் மக்களுக்கு நன்மை தருகின்ற தேர்தல் அறிக்கையாக 2026 தேர்தல் அறிக்கை இருக்கும் இவ்வாறு கழகப் பொருளாளரும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் அமைப்பு செயலாளர் வி.மருதராஜ், மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சி.எஸ்.ராஜமோகன், திண்டுக்கல் கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ஏ.முருகன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், மாநில பொதுக் குழு உறுப்பினர் நெப்போலியன்,அகரம் பேரூர் செயலாளர் சக்திவேல், தாடிக்கொம்பு பேரூர் செயலாளர் முத்தையா, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணி, மோகன், ராஜன், சேசு, முரளி, இக்பால், மாவட்ட இளைஞரணி செயலாளர் ராஜேஷ் கண்ணா, மாவட்ட பாசறை செயலாளர் சிவபாரதி, மாவட்ட மாணவரணி செயலாளர் தனஞ்செயன், மாவட்ட தொழிற்சங்க செயலாளர்கள் ஜெயராமன், முத்தையா, மாவட்ட மருத்துவரணி செயலாளர் ராஜசேகர், மதுரை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை செயலாளர் பிரேம், மாவட்ட பாசறை இணை செயலாளர் முகமது அப்துல்லா, பி.ஜே.பி. மாவட்ட தலைவர் முத்துராமலிங்கம், முன்னாள் தலைவர் தனபால், பாமக கிழக்கு மாவட்ட செயலாளர் ஜான் கென்னடி, அம்மா மக்கள் முன்னேற்ற மாவட்ட செயலாளர் நல்லுசாமி, தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ரத்தீஷ், தமிழக மக்கள் முன்னேற்றக் மாவட்ட தலைவர் முத்து ரத்தினவேல் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் ரஜினி கோவிலில் மஹா சிவராத்திரியை முன்னிட்டு சிவ கைலாய வாத்தியத்துடன் சிறப்பு பூஜை

## ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



**திருமங்கலம். பிப். 14-**

மஹா சிவராத்திரியை முன்னிட்டு மதுரை மாவட்டம்,திருமங்கலம் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலில் நான்கு கால சிறப்பு பூஜைகள் மற்றும் சிவ கைலாய வாத்திய இசையுடன் சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றது.

மதுரை மாவட்டம்,திருமங்கலம் சீயோன்நகர்,ரஜினி அவென்யூவில் வசித்து வரும் நடிகர் ரஜினிகாந்தின் தீவிர பக்தரும், முன்னாள் ராணுவ வீரருமான எஸ்.கார்த்திக், இந்தியாவிலே முதல் முறையாக நடிகர் ரஜினிகாந்திற்கு கோவில் அமைத்து கருங்கல்லினால் ஆன மூலவர் உற்சவர் சிலைகளுக்கு தினம் தோறும் பூஜைகள் நடத்தி வருகிறார்.ரஜனி பக்தர்களின் குலதெய்வ கோவிலாக திகழ்ந்திடும் இங்கு ரஜினியை தங்களது குலதெய்வமாக கொண்டுள்ள ரசிகர்கள் இங்கு வழிபாடு நடத்திய பின்னர் தங்களது சுபநிகழ்வுகளை துவங்கிடுவது வழக்கம். இந்நிலையில் மஹா சிவராத்திரியை முன்னிட்டு அருள்மிகு ஸ்ரீரஜினி கோவிலில் நான்குகால பூஜைகள் சிவ கைலாய இசையுடன் வேத மந்திரங்கள் முழங்கிட சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதையொட்டி ஸ்ரீ ரஜினி கோவிலில் உள்ள ரஜினியின் மூலவர் உற்சவர் சிலைகளுக்கு ருத்ராட்ச மாலை அணிவித்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா சிவராத்திரி வழிபாடு நடத்தப்பட்டது.அதன் பின்னர் உழைப்பாளி ரஜினி சிவன் படத்திற்கு 501 வடை மாலை சாற்றியதுடன், ரஜினி கோவில் சன்னதியிலுள்ள இரண்டு அறை முழுவதிலும் ரஜினியின் 5001 கண்கள் புகைப்படங்கள் ஒட்டி உழைப்பாளி ரஜினி சிவன் படத்திற்கு மகா தீபம் காட்டப்பட்டு பால்,பன்னீர், புஷ்பம் சந்தனம் உள்ளிட்ட பல்வேறு அபிஷேகம் செய்யப்பட்டு மஹா தீபாராதனையுடன் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இந்த வழிபாடு நிகழ்வுகளை ரஜினியின் தீவிர பக்தரும், முன்னாள் ராணுவ வீரரும், திருமங்கலம் அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவில் நிறுவனருமான எஸ்.கார்த்திக் மற்றும் அவரது குடும்பத்தினர் சிறப்புடன் செய்திருந்தனர்.இதனை தொடர்ந்து மஹா சிவராத்திரி குலதெய்வ கோவில் வழிபாடு விழாவில் கலந்து கொண்ட ரஜினி பக்தர்கள் அனைவருக்கும் கோவில் பிரசாதத்துடன் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டதுஇது குறித்து ஸ்ரீ ரஜினி கோவில் நிறுவனர் எஸ்.கார்த்திக் கூறுகையில்:- மகாசிவராத்திரி நாளன்று பொதுமக்கள் அனைவரும் தங்களது குலதெய்வ கோவிலுக்குச் சென்று வழிபடுவது வழக்கம்.அதே போல் ரஜினி பக்தர்களின் குலதெய்வ கோவிலான திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவிலில் சிவ கைலாய வாத்திய இசையுடன் மஹா சிவராத்திரி சிறப்பு வழிபாடு, 501 வடைமாலை சாற்றி நான்கு கால பூஜைகள் சிறப்பாக நடைபெற்றது.இதில் ஏராளமான ரஜினி பக்தர்கள் கலந்து கொண்டு தங்களது குலதெய்வமான ரஜினியை வழிபட்டு சென்றனர் என்று தெரிவித்தார்.



மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 3- ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் பைக்காரா கருப்பசாமி தலைமையில் பழங்காநத்தம் பகுதியில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதி துண்டு பிரசுரங்களை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர். அண்ணாதுரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர். செல்வகுமார், பைக்காரா முத்துவேல், பழங்காநத்தம் ராஜாராம், வக்கீல் பாலமுருகன், லக்கி முனீஸ், சி.ஆர்.கதிரவன், கேபிள் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் போதைப்பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளது:

# ரூ.5 ஆயிரம் முன்கூட்டியே வழங்கியதால் தி.மு.க.வை மக்கள் நம்ப தயாராக இல்லை

## மதுரையில் வி.வி.ராஜன்செல்லப்பா எம்.எல்.ஏ. பேட்டி



**மதுரை, பிப் 14-**

தமிழகத்தில் கஞ்சா, போதைப்பொருள் நடமாட்டம், வன்முறை அதிகரித்துள்ளது. ரூ.5,000 முன்கூட்டியே வழங்கியதால் தி.மு.க.வை மக்கள் நம்ப தயாராக இல்லை என்றுமதுரையில் வி.வி.ராஜன்செல்லப்பா எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

தமிழக ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் 125 நாள் வேலைத் திட்டத்தை தி.மு.க. அரசு சீர்குலைக்க கூடாது என வலியுறுத்தி அ.தி.மு.க. சார்பில் மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ராஜன் செல்லப்பா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்தில் பங்கேற்ற வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. பேசியதாவது-தி.மு.க.வின் தோல்வி பயம், கூட்டணி பிரச்சினை காரணமாக மகளிர் உரிமைத் தொகை 5,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. முன்கூட்டியே உரிமைத் தொகை வழங்க சட்டமன்றத்தில் நிதி கொள்கையில் பரிந்துரை பெற்றிருக்க வேண்டும், தேர்தலுக்காக தி.மு.க. 5,000 ரூபாய் வழங்கியுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க வாய்ப்புள்ளது என்பதற்க்காக முன்கூட்டியே 5,000 ரூபாய் வழங்க கூடாது. மகளிர் உரிமைத் தொகைக்கு அ.தி.மு.க. எதிரானது அல்ல. கருத்து கணிப்புகள் தி.மு.க.வுக்கு சாதகமாக இல்லை என்பதால் 5,000 ரூபாய் முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கஞ்சா, போதைப்பொருள் நடமாட்டம், பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்துள்ளது. 5,000 முன்கூட்டியே வழங்கியதால் தி.மு.க.வை மக்கள் நம்ப தயாராக இல்லை. இவ்வாறு அவர் பேசினார். இதனை தொடர்ந்து ராஜன் செல்லப்பா மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வரும் சத்துணவு ஊழியர்கள் போராட்டம் மற்றும் வருவாய்த்துறை ஊழியர்கள் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தார்.

# மண்டபம் ஒன்றியத்தில் தி.மு.க.வை கண்டித்து அ.தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம்

**ராமேசுவரம், பிப். 14-**

மத்திய அரசின் 125 நாள் வேலை திட்டம் குறித்து அவதூறு பரப்பும் தி.மு.க.வை கண்டித்து மண்டபம் ஒன்றிய அ.தி.மு.க. சார்பில் உச்சிப்புளி பேருந்து நிருத்தம் பகுதியில் ஆர்ப்பாட்டம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஒன்றியம் உச்சிப்புளி பேருந்து நிறுத்தம் பகுதியில் தி.மு.க ஆட்சியை கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைச் செயலர் முனியசாமி தலைமை வகித்தார். மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற துணைச் செயலர் ரத்தினம் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்திற்கு வருகை தந்த தொண்டர்களை ஒன்றிய செயலர்கள் ஜானகி ராமன் மண்டபம் கிழக்கு) மருது பாண்டியன் (மண்டபம் மேற்கு) ஆகியோர்கள் வரவேற்றனர்.

ராமநாதபுரம் மாவட்ட அ.தி.மு.க. இணைச் செயலர் கவிதா சசிகுமார், இளைஞரணி மாவட்ட செயலர் ஸ்டாலின், பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் குப்பு ராமு, ராமநாதபுரம் கிழக்கு மாவட்ட தமாகா செயலர் நாகேஸ்வரன், மண்டபம் கிழக்கு ஒன்றிய அமமுக செயலர் கணேசன் பேசினர். மாவட்ட செயலர்கள் கருணாகரன் (வழக்கறிஞர் அணி), டாக்டர் இளைய ராஜா ( மருத்துவர் அணி), மண்டபம் ஒன்றிய மகளிர் அணி துணை செயலர் விஜய லட்சுமி, ராமேஸ்வரம் நகர் செயலர் அர்ச்சுணன் உள்பட பலர் பங்கேற்று தி.மு.க ஆட்சியின் அவல நிலையும் குறித்து சிறைப்புரையாற்றினாரகள்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# கடலாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தி.மு.க. அரசை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்



**கடலாடி, பிப். 14-**

கடலாடியில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் முன்பு தி.மு.க. அரசை கண்டித்து அ.தி.மு.க. சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதி திட்டத்தை சீர் குலைக்கும் தி.மு.க. அரசை கண்டித்து தமிழகம் முழுவதும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன்பு அ.தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் முன்பு அ.தி.மு.க.வினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கழக எம்.ஜி.ஆர்.மன்ற துணை செயலாளர் எம்.சுந்தரபாண்டியன்- கழக விவசாய பிரிவு துணை செயலாளர் பி. சண்முகபாண்டியன் ஆகியோர் தலைமை தாங்கினர்.பொதுக்குழு உறுப்பினர் குமரையாத் தேவர் முன்னிலை வகித்தனர்.ஒன்றிய செயலாளர்கள் என்.கே.முனியசாமிபாண்டியன்-சி.பிரவீன்ங்குமார் -ஏ எஸ்.பி. அந்தோனிராஜ் கே.ராஜேந்திரன்- ஜெய பாண்டியன் -ஆகியோர் ஆர்ப்பாட்டத்திற்கு கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். இதில் பா.ஜ.க -அ.ம.மு.க -தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் உள்ளிட்ட கூட்டணி கட்சியினரும் அதன் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரம், கோடைகால சிறப்பு தொகுப்பாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து மேலூர் நகர் தி.மு.க. சார்பில் மேலூர் பேருந்து நிலையம் முன்பு பட்டாசு வெடித்து நகர்மன்ற தலைவரும், நகர் செயலாளர் முகமது யாசின் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

# அலங்காநல்லூரில் தி.மு.க. அரசை கண்டித்து அ.தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம்



**அலங்காநல்லூர், பிப். 14-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் யூனியன் அலுவலகம் முன்பாக ஒன்றிய அ.தி.மு.க. சார்பில் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி ஆணைக்கிணங்க சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் ஆலோசனைப்படி ஒன்றிய கழக செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன் தலைமையில் ஆளும் தி.மு.க. அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பா.ஜ.க. தேசிய பொதுக்குழு உறுப்பினர் பழனிவேல்சாமி, மாவட்ட துணை தலைவர் கோவிந்தமூர்த்தி, அ.ம.மு.க. ஒன்றிய செயலாளர் கோடீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகர் செயலாளர் அழகுராஜ் வரவேற்றார். அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ மாணிக்கம் கண்டன உரையாற்றினார். அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட தாலிக்கு தங்கம், அம்மா உணவகம் உள்ளிட்ட ஏழை எளிய மக்கள் பயன்பெறும் திட்டங்களை முடக்கியதே இந்த தி.மு.க. அரசின் சாதனை என அவர் பேசினார். தொடர்ந்து 100 நாள் வேலை உறுதி திட்டத்தை 125 நாளாக உயர்த்திய மத்திய அரசு மீது பொய் பிரச்சாரம் செய்து சீர்குலைக்க நினைக்கும் ஸ்டாலின் தி.மு.க. அரசை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் அ.தி.மு.க., பா.ஜ.க., அ.ம.மு.க., தமிழ் மாநில காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. அரசை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் மேலூரில் கண்டன ஆர்ப்பாட்டம்



**மேலூர், பிப். 14-**

மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேலூர் தெற்கு ஒன்றியம், மேலூர் வடக்கு ஒன்றியம் அ.தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மேலூர் யூனியன் அலுவலகம் முன்பு நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மேலூர் தெற்கு ஒன்றிய செயலாளரும், முன்னாள் யூனியன் சேர்மன் பொன்னுச்சாமி, மேலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் பொன் ராஜேந்திரன் ஆகியோர் தலைமை தாங்கினார்.

மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளரும், மேலூர் சட்டமன்ற உறுப்பினருமான பெரியபுள்ளான் என்ற செல்வம், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ. தமிழரசன் ஆகியோர் கண்டன உரையை தொடங்கி வைத்தனர். 100 நாள் கிராமப்புறங்களில் வேலை திட்டத்தை 125 நாள் வேலைதிட்டமாக மத்திய அரசு கொண்டு வந்ததை தமிழக அரசு பொய் பிரச்சாரங்களை பொதுமக்களிடம் கூறி வருவதை கண்டித்து தி.மு.க. அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

இந்நிகழ்ச்சியில் மா வட்ட பொருளாளர் அம்பலம், மாநில தகவல் தொழில்நுட்பப் பிரிவு துணைத் தலைவர் கௌரி சங்கர், மாநில எம்.ஜி.ஆர் இளைஞர் அணி துணைச் செயலாளர் விஷ்ணுவேல், மேலூர் நகர செயலாளர் எஸ்.எம்.சரவணகுமார், அவல்லாளப்பட்டி பேரூராட்சி செயலாளர் ஏ.கே.உமாபதி, அமமுக கட்சியின் அமைப்புச் செயலாளர் செ. சரவணன், பொறுப்பாளர் ஆசையன் சாமி, மேலூர் ஒன்றிய செயலாளர்கள் சோமாசி, சந்திரசேகர், மேலூர் நகர் செயலாளர் ஆனந்த், அ.வள்ளப்பட்டி பேரூர் செயலாளர் சோமசுந்தரம், பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகள் மாவட்ட துணை தலைவர் கண்ணன், முன்னாள் ராணுவ பிரிவு மாநிலச் செயலாளர் அனந்தஜெயம், மாவட்ட ஆன்மிக பிரிவு தலைவர் தர்மலிங்கம், மாவட்ட சிந்தனை பிரிவு தலைவர் சேவுகமூர்த்தி, த.ம.க கட்சியின் நிர்வாகிகள் கணேசன், பாபு, அழகர்சாமி, மேலூர் அ.தி.மு.க. தெற்கு, வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், மற்றும் கூட்டணி கட்சியினர் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மனிதவள மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசின் பணியாளர் தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2025-ம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகுதி-IV உள்ளிட்ட போட்டித் தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 9801 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, என்.கயல்விழி செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 82 கோடியே 9 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 35 கோடியே 2 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் 5 கோடியே 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மரபணு பிரிவுக் கட்டிடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசின் அனைத்து தேர்வு முகமைகள் மூலம் செய்யப்படும் பணியாளர்கள் தேர்வுகள் தொடர்பான செயல்முறைகளை எளிமைப்படுத்தும் 'தேர்வுக்களம்' எனும் ஒருங்கிணைந்த கைபேசி செயலியும், அரசு அலுவலர்கள் இணையவழியில் தங்களுடைய திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையில் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கும் 'திறன் 360°' வலைவாசலையும் தொடங்கி வைத்தார்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், காவல் நிலைய அதிகாரிகளின் பயன்பாட்டிற்கென 27 கோடி ரூபாய் செலவில் 300 புதிய நான்கு சக்கர வாகனங்களையும், மோப்ப நாய் பிரிவின் பயன்பாட்டிற்காக 10 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் 60 புதிய வாகனங்களையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

### சென்னையில் புதிதாக ஆராய்ச்சி மையம் அமைக்க

# 3,510 கோடி ரூபாய் முதலீட்டில் அமெரிக்க நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து

**சென்னை, பிப். 14-**

ரூ.3,510 கோடி முதலீட்டு பொறுப்புறுதியுடன் அமெரிக்காவைச் சேர்ந்த கே.எல்.ஏ. கார்ப்பரேஷனின் துணை நிறுவனமான கே.எல்.ஏ. இந்தியா நிறுவனம் சென்னையில் ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் புத்தாக்க மையம் அமைப்பதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று (13.02.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்காவைச் சேர்ந்த கே.எல்.ஏ. கார்ப்பரேஷன் நிறுவனத்தின் துணை நிறுவனமான கே.எல்.ஏ. இந்தியா லிமிடெட் 3,510 கோடி ரூபாய் முதலீட்டு பொறுப்புறுதியுடன், சென்னையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் புத்தாக்க மையம் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை, 2030-ம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்திட வேண்டும் என்ற இலக்கினை விரைவாக அடைந்திடவும், பெருமளவிலான முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிடவும், தமிழ்நாடு அரசு பல்வேறு முற்போக்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

வாகனங்கள், மின்னணு, ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள் உள்ளிட்ட பல்வகைப்பட்ட உற்பத்தித்துறைகளில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி பெற்றுள்ளதுடன், செமிகண்டக்டர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உயிர் அறிவியல், புத்தொழில், புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய திறன் மையங்கள் போன்ற வளர்ந்துவரும் துறைகளிலும், பாரம்பரியம் மிக்க கப்பல் கட்டும் துறையிலும் முன்னிலை பெறும் வகையில் அத்துறைகளிலும் அதிக முதலீடுகளை தமிழ்நாடு அரசு ஈர்த்து வருகின்றது.

அமெரிக்க நாட்டைத் தலைமையிடமாகக் கொண்ட கே.எல்.ஏ. கார்ப்பரேஷன், செமிகண்டக்டர் துறைக்கான தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கும் உலகளாவிய முன்னணி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், சிப் உற்பத்தியில் பயன்படும் ஆய்வு, அளவீடு மற்றும் தரவு பகுப்பாய்வு அமைப்புகளை உருவாக்குகிறது.

இதன் தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர் தயாரிப்புகளின் தரம், செயல்திறன் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்த உதவுகின்றன. உலகம் முழுவதும் உள்ள முன்னணி சிப் உற்பத்தியாளர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சேவைகளை வழங்கி, புதிய தலைமுறை செமிகண்டக்டர் வளர்ச்சியில் இந்நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

கே.எல்.ஏ. கார்ப்பரேஷனின் துணை நிறுவனமான கே.எல்.ஏ. இந்தியா நிறுவனம், 3,600 கோடி ரூபாய் முதலீட்டு பொறுப்புறுதியுடன் சென்னையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் புத்தாக்க வளாகத்தை அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

12 ஏக்கர் நிலப்பரப்பளவிலான இந்த வளாகத்தில், உயர் செயல்திறன், கணினி தொழில்நுட்பம், செயல்முறை கட்டுப்பாடு, பொறியியல் மென்பொருள் போன்ற துறைகளில், மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பணிகளை இந்நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. இதன் மூலம், அடுத்த 10 ஆண்டுகளில், சுமார் 4,000 உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பட்ஜெட் கூட்டத்தொடரின்... (1-ம் பக்க தொடர்ச்சி)

ஒப்பந்தம், ராணுவ முன்னாள் தளபதி நரவணேவின் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளவை குறித்து விவாதம் கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் பாராளுமன்ற இரு அவைகளும் முடங்கின. எப்ஸ்டீன் கோப்புகளுடன் தொடர்புடைய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி ராஜிநாமா செய்ய வேண்டும் என்றும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து மார்ச் 9-ம் தேதிக்கு பாராளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைக்கப்படுவதாக அவைத்தலைவர்கள் தனித்தனியே அறிவித்தனர். இதன்படி பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் அமர்வு நேற்றுடன் (பிப். 13) நிறைவடைந்தது. இரண்டாம் அமர்வு மார்ச் 9 ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 2 வரை நடைபெறவிருக்கிறது.

## 3 ஐ.பி.எஸ். அதிகாரிகள் இடமாற்றம்

**சென்னை, பிப். 14-**

தமிழகத்தில் 3 ஐ.பி.எஸ். அதிகாரிகளை இடமாற்றம் செய்து மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, தூத்துக்குடி எஸ்.பி.யாக இருந்த சிலம்பரசன், சென்னை சட்டம் - ஒழுங்கு துணை ஐ.ஜி. மற்றும் எஸ்.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல திருநெல்வேலி மேற்கு, காவல் துணை ஆணையராக இருந்த மதன், தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி.யாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருநெல்வேலி மாவட்ட தலைமையக காவல் துணை ஆணையராக இருந்த விஜயகுமார், திருநெல்வேலி மேற்கு - துணை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். திருநெல்வேலி காவல் ஆணையர், அந்த மாவட்ட தலைமையக காவல் துணை ஆணையர் பொறுப்பையும் சேர்த்து கவனிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1.31 கோடி மகளிர் வங்கி கணக்கில்... (1-ம் பக்க தொடர்ச்சி)

முடியுமா? குழந்தைகள் தேர்வு எழுதும் காலத்தில் அவர்களுக்கு உணவு கொடுப்பதில் இருந்து, தேவையான கல்விச் செலவுகளைச் செய்ய முடியுமா? இந்தக் கஷ்டத்தை எல்லாம் நினைத்துப் பார்த்து தான், ஒரு முக்கியமான முடிவை எடுத்துள்ளேன். அதன்படி, இந்த பிப்ரவரி மாதம் மட்டுமில்லாமல் அடுத்த 2 மாதம்... அதாவது மார்ச், ஏப்ரலுக்கான உரிமைத் தொகை தவணைகளையும் சேர்த்து 3 ஆயிரம் ரூபாயும், கூடுதலாகக் கோடைக்காலச் செலவுகளை கருத்தில் கொண்டு மேலும் 2 ஆயிரம் ரூபாய் சிறப்புத் தொகையும் சேர்த்து, இந்த பிப்ரவரி மாதம் 5 ஆயிரம் ரூபாயைச் சிறப்பு மகளிர் உரிமை தொகையாக ஒரு கோடியே 31 லட்சம் பெண்களுக்கு வழங்க உத்தரவிட்டிருக்கிறேன்.

### கவனமாகச் செலவிடுங்கள்...

இந்த தருணத்தில் இன்னொரு அன்பான வேண்டுகோள்: இந்த 5 ஆயிரம் ரூபாயை அடுத்த 3 மாதத்துக்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதால், கொஞ்சம் கவனமாகச் செலவிடுங்கள். முடிந்த அளவுக்குச் சேமிக்கவும் பாருங்கள். உங்கள் ஆதரவோடு அடுத்து அமையப் போவதும் திராவிட மாடல் ஆட்சிதான். அதனால், நீங்கள் மனம் குளிரும் சிறப்பான ஒரு அறிவிப்பையும் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

### 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி...

அடுத்த திராவிட மாடல் 2.0 ஆட்சிக் காலத்தில், உங்களின் உரிமைத்தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். சொன்னால் சொன்னதைச் செய்யும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி இது. இதையும் எப்படி செய்வோம் என்று சிலர் கேட்கலாம். கடந்த ஆட்சியின் 10 ஆண்டுகளில், தமிழ்நாடு அடைய முடியாத பொருளாதார வளர்ச்சியை இந்தியாவே திரும்பிப் பார்க்கும் அளவுக்குச் சாதித்துக் காட்டியவர்கள் நாங்கள். அதனால், எந்தத் தடை வந்தாலும் அதையெல்லாம் தாண்டி, தமிழ்நாடே வெல்வோம் ஒன்றாக எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மகளிர் உரிமைத்தொகை அறிவிப்பு: துணை முதல்வர் உதயநிதி வரவேற்பு

**சென்னை, பிப். 14-**

மகளிர் உரிமை தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்புக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவோருக்கு நேற்று காலையே ரூ.5,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் மகளிர் உரிமைத்தொகை ரூ.2,000 ஆக உயர்த்தப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்துள்ளார். முதல்வரின் இந்த அறிவிப்புக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், தமிழ்நாடு என்றால் மகளிர் நாடு என்பதை மீண்டும் உறுதி செய்திருக்கிறது முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு. சட்டமன்றத் தேர்தலைக் காட்டி அடுத்த சில மாதங்களுக்கு 'கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தை' தடுக்கப் பார்த்தவர்கள், வாயடைத்துப் போகும் வகையில், பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரம், கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக ரூ.2 ஆயிரம் என, 1.31 கோடி மகளிரின் வங்கிக்கணக்கில் நேற்று காலை ரூ.5 ஆயிரம் வரவு வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த மகிழ்ச்சியை மேலும் இரட்டிப்பாக்கும் வகையில், திராவிட மாடல் 2.0-ல் மகளிருக்கான உரிமைத் தொகையை 2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம் என்றும் நம் முதல்வர் அறிவித்துள்ளார். தமிழ்நாட்டு மகளிர் வெல்லும், பெண்களுக்கு என்றும் துணை நிற்போம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் பணிகள்:

# கலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையக் குழு ஆலோசனை

**சென்னை, பிப். 14-**

தமிழகத்தில் நடக்கும் எஸ்.ஐ.ஆர். பணிகளை மதிப்பீடு செய்யவும், சட்டமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்வதற்கும் இந்திய தேர்தல் கமிஷனில் இருந்து துணை கமிஷனர்கள் சென்னைக்கு வந்துள்ளனர். புதுச்சேரியில் கடந்த 3 தினங்களுக்கு முன் ஆய்வுப் பணியை முடித்துள்ள அவர்கள் தமிழகத்தில் 2 நாட்கள் ஆய்வுக் கூட்டத்தை நடத்துகின்றனர்.

அதன்படி சென்னை எம்.ஆர்.சி. நகரில் உள்ள நட்சத்திர ஓட்டலில் நேற்று முன்தினம் துணை தேர்தல் கமிஷனர்கள் மானேஷ் கார்க், பானு பிரகாஷ், பவன்குமார் சர்மா, சஞ்சய்குமார், ஆசிஷ் கோயல் உள்பட 7 பேர் கொண்ட குழுவினர் ஆய்வுக்கூட்டத்தை மேற்கொண்டனர். முதலில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் தமிழகத்தில் உள்ள தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

அதைத்தொடர்ந்து தேர்தல் பணியில் ஈடுபட உள்ள வருமான வரித்துறை, சுங்கத்துறை, காவல்துறை, ரெயில்வே, துணை ராணுவம், அஞ்சல், சிவில் விமான போக்குவரத்து துறை உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட துறையின் ஒருங்கிணைப்பு அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர். இதில் தேர்தல் முன்னேற்பாடுகள், ஆயத்த பணிகள் பற்றி விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், நேற்று காலை அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் (கலெக்டர்கள்) இந்தக்குழு ஆலோசனை மேற்கொண்டது. அதைத்தொடர்ந்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், கலவரம் ஏற்படக்கூடிய வாக்குச் சாவடிகள், அங்கு மேற்கொள்ள இருக்கும் தடுப்பு நடவடிக்கைகள், வாக்குச்சாவடி முழுவதும் மேற்கொள்ளப்பட வேண்டிய கண்காணிப்புப் பணிகள், அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், கண்காணிப்பு கேமரா வசதிகள், வாக்குப்பதிவு நேரடி ஒளிபரப்பு வசதிகள், கட்டுப்பாட்டு அறை அமைத்தல், வாக்காளர்களுக்கு தேவையான கழிவறை, குடிநீர் வசதிகள், வயதான மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வந்து வாக்களிக்க வசதியாக செய்யப்பட வேண்டிய சாய்தளம், சக்கர நாற்காலி உள்ளிட்ட வசதிகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.



மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 2-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் ஏ.தங்கபாண்டி தலைமையில் ஜீவாநகர் பகுதியில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதி துண்டு பிரசுரங்களை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர். அண்ணாதுரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், வி.பிஆர்.செல்வகுமார், எஸ்.எம்.டி.ரவி, பைக்காரா முத்துவேல், எம்.ஏ.நாசர், திடீர்நகர்பாலா மற்றும் மணிகண்டன், பந்தல்நாகலிங்கம், சுரேஷ்குமார், முருகேசன், ராஜாசீனிவாசன், கனகராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.